மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly Navember 2014

விலை : ரூ.10/- இல்லம் : 2 சுற்றம் : 11 ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி



## அகவை அறுபதில் தமிழீழத் தேசியத் தலைவர்

NEW

FLAT FOR SALE @ BESANT NAGAR

**4 - in -one luxury Apartment**




Site at :

49, MGR Salai,
**Kalashetr**a Colony,
Besant Nagar,
Chennai.

Suresh & Co.
Engineers & Builders

#22, Ponniamman Koil Street Urur, Adyar, Chennai - 20.

ph:044-24463149
94440 18004
94440 48902

மனிதமே முதன்மை!

# முற்றம்

Mutram monthly Navember 2014 பல்சுவை இதழ்

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம் .ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**பி.எம்.பாலா**
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
**டேவிட் கிறிஸ்டோபர் ஆனந்த்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**சு.ஏழுமலை** எம்.ஏ., எம்ஃபில்.,
**க. பவானி** பி.ஏ.,
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**பெ. அர்ஜுன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
V.**கணேஷ்** திருவல்லிக்கேணி
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**

அலுவலக முகவரி
13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

தமிழீழம் உதயமாவது உறுதி (தலையங்கம்) .................................... 4

செயலிழந்த இசைக் கலைஞர்கள் சங்கம்........................................ 6

வண்டி வாங்க வேண்டும் (சிறுகதை)
இருங்கோவேள்................................................................................. 8

இயற்கை (கவிதை)
பாரதிதாசன்........................................................................ 10

நல்ல வழியில் வளரட்டும்
தமிழ் மாநில காங்கிரஸ்
வேர்மகள்.......................................................................................... 12

இணையதள வணிகம்.......................................................................... 14

தமிழீழம் என்னும் நெருப்பு
காசி ஆனந்தன்................................................................................. 16

கத்தி கூர்மையானதுதான்
ஆனால் அது யாருடையது............................................................. 19
மெஞ்ஞானி

சீனாவின் வால் ஆடுகிறது
பி. எம்.பாலா..................................................................................... 20

முல்லை நீதான் (கவிதை)
பாவலர் சீனி. சுந்தரமூர்த்தி.............................................................. 22

நட்பு (சிறுகதை)
ஏழுமலை......................................................................................... 23

பறவைகள் பல விதம் (கவிதை)
கவிஞர் இராம. பரஞ்சோதி ..............................................................25

பொது நல வழக்குகளின் மீதான
விமர்சனங்கள்.................................................................................. 26

பேஸ்புக் வேறுபாடு என்ன?
டேவிட் கிறிஸ்டோபர்....................................................................... 30

எது தமிழ் (கவிதை)
கவிஞர் மருத்துவர் ச.பாஸ்கரன்......................................................... 32

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# தமிழீழம் உதயமாவது உறுதி

அறுபதாம் அகவையைத் தொடுகிறார் அருந்தமிழரான தமிழீழத்தின் தேசியத்தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன் அவர்கள். பேரரசு களை எதிர்த்த பெருந்துணிவுக்காரர் பிரபாகரன். உலகத்திலேயே தனக்கு எதிராக நிற்கும் அரசின் குடி மக்கள் ஒருவரைக் கூட கொல்லாமல் போர் நடத் திக் காட்டிய மனிதாபிமானி. காட்டிக் கொடுத்தவர் களையும் அவர்கள் திருந்துவார்கள் என்ற நல் நினைவோடு அவர்களுக்குத் தண்டனை தராமல் எட்டி நின்றவர் பிரபாகரன்.



ஈழத்தலைவர் கடைபிடித்த மனிதாபிமானம், ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை, துணிவு, அர்ப் பணிப்பு எல்லாம் உலகோருக்கு பாடமாக வைக்கப் பட வேண்டியவைகளாகும்.

உலகத்தில் பல விடுதலைப்போர்கள் நடந்திருக் கின்றன. ஆனால் ஈழப்போர் போல் எங்கும் நடந்த தில்லை. பெரிய நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து தாக்கிய போது, மிகச்சிறிய விடுதலை வீரர்களைக் கொண்ட படையை வைத்துக் கொண்டு எதிரிகளை விரட்டியவர் என்றால் அவர் பிரபாகரன் மட்டும் தான். எந்த நேரத்திலும் தனது நாட்டின் விடு தலையை தனது கடமையாக எண்ணி செயல்பட்ட விடுதலைத் தலைவர் பிரபாகரன் அவர்கள்.

ஒருவரின் உழைப்பு, உயிர் இழப்பு என்பது ஒருநாளும் வீண் ஆனதாக வரலாறுகள் இல்லை. சொந்த மண்ணின் விடுதலைக்காக உழைத்த தேசியத் தலைவரின் உழைப்பு ஒருநாளும் வீண் போகாது. மாவீரர்களின் அர்ப்பணிப்பும் என்றுமே வீண் போகாது என்பதை வரும் வரலாறுகள் மெய்ப் பிக்கும்.

தமிழ்நாட்டில் அவரது பெயரைச் சொல்லி சம்பாதித்தவர்கள்? அதிகம். அவரிடம் பணத்தை வாங்கி வசதியான வாழ்க்கை வாழ்பவர்களும்

இருக்கத்தான் செய்கிறார்கள் என்கின்றனர். அண்மையில் ஒரு ஈழத்தமிழர் மிகவும் வருத்தமாக ஒரு நிகழ்வை பகிர்ந்து கொண்டார். "தேசியத் தலைவரின் படத்தை ஒட்டிய உண்டியலை வைத்துக் கொண்டு, போவோர் வருவோரிடம் நிதி என்ற பெயரில் பிச்சை எடுக்கிறார்கள். எனக்கு கோபம் வந்தது என்ன செய்வது? நாங்கள் இங்கே அகதிளாய் அல்லவோ இருக்கிறோம்" என்றார். உலகம் போற்றும் ஒரு மாபெரும் விடுதலைத் தலைவரை இப்படியா மதிப்பது?

தாய்த்தமிழகம் ஈழத்தமிழர்களுக்காக உண்மையாக தோள்கொடுத்தால், தமிழீழம் உதயமாவது உறுதி என்பதை தமிழகத்தின் தமிழர்கள் உணர வேண்டும்.

விடுதலை வேங்கை பிரபாகரன் அவர்களுக்கு வாழ்த்துச் சொல்ல நினைக்கும் ஒவ்வொரு தமிழரும் ஒற்றுமை என்ற ஆயுதத்தை மனதில் ஏந்தினால், அதுவே அவருக்கு வாழ்த்தாக அமையும். அவர் எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

முக்கியமாக ஈழத்துத் தமிழர்கள் ஒன்றுசேர வேண்டும். மண்ணை மீட்க வேண்டும். தமிழர் களுக்கென்று ஒரு நாடு உலக வரைபடத்தில் குறிக்கப்பட வேண்டும். அதுவே தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு உண்மையான வாழ்த்தாக இருக்கும். அவரது மகிழ்ச்சியாக இருக்கும்.

◆

## மாவீரர் நாள்

மாவீரர் நாள் அன்றும் போராளிகளின் நினைவு நாள் அன்றும் ஒலிக்கப்படும் பாடல் மாவீரர் நாள் பாடல் ஆகும். இந்த பாடல் புதுவை இரத்தினதுரை அவர்களால் இயற்றப்பட்டது. வர்ணராமேஸ்வரன் அவர்கள் பாடியது. ஈகச்சுடரேற்றும் பொழுது இது பாடப்படுகிறது, அல்லது ஒலிபரப்படுகிறது. இந்தப் பாடல் பின்வருமாறு தொடங்கிறது:



மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை முடிசூடும் தமிழ்மீது உறுதி!
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன் வரலாறு மீதிலும் உறுதி!
விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை வீரர்கள் மீதிலும் உறுதி!
இழிவாக வாழோம்! தமிழீழப்போரில் இனிமேலும் ஓயோம் உறுதி!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!
தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!

இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி கேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!
இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி கேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!

உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள் உறவினர் வந்துள்ளோம்!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள் உறவினர் வந்துள்ளோம்!
அன்று செங்களம் மீதிலே உங்களோடாடிய தோழர்கள் வந்துள்ளோம்!
அன்று செங்களம் மீதிலே உங்களோடாடிய தோழர்கள் வந்துள்ளோம்!

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!

சென்னை, வடபழனியில் இயங்கிவரும் திரை இசைக்கலைஞர்கள் சங்கத்தில் இருந்து வெளி வருகிற எந்தவொரு அறிக்கையாக இருந்தாலும் பிழைகளால் நிரப்பப்பட்ட அறிக்கையாகவே வெளி வருவது வருத்தத்துக்குரியதாகும்.

இச்சங்கத்திற்கு தலைவராக தற்போது இருப்பவர் திரு. எஸ். ஏ. இராஜ்குமார் அவர்கள். இவர் பாடலாசிரியரும் கூட. இருந்தும், இந்தச் சங்கத்தின் நிர்வாகிகள் தமிழர்களா என உறுப் பினர்கள் கேட்கும் அளவிற்கு தப்பும் தவறுமாக அறிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக 9/11/2014 அன்று பொதுக்குழு நடக்க இருப்பதாக அறிவிக்கும் ஒரு துண்டறிக்கையை நாம் பார்த்தோமானால் பிழைகள் இல்லாத பத்தியே இல்லை என்னும் அளவிற்கு உள்ளது.

மேலும் Four அண்ட் Half Callsheet Payment, சோலோ Instrument, Life மெம்பர்ஷிப், Associate மெம்பர் என்றெல்லாம் அச்சிடப்பட்டுள்ளது. அண்ட், சோலோ, மெம்பர், மெம்பர்ஷிப் என்பதெல்லாம் தமிழானது எப்போது என்பதுதான் தெரியவில்லை. இது மட்டுமல்லாது, தீர்மானங்களை செயற்குழு பரிந்துரைக்கலாம். பொதுக்குழு, தீர்மானத்தை நிறைவேற்றும் அல்லது நிராகரிக்கும். இதுதான் சங்க நடைமுறை ஆனால், இவர்கள் சொல்வதோ '..... உயர்த்திக் கொடுப்பதற்கு பொதுக்குழு பேரவைக்கு பரிந்துரைக்கிறது' என்று. பொதுக்குழுவை விட உயர்நிலை எது என்று தெரியவில்லை.

அது மட்டுமல்லாது, பொதுக்குழு நடக்க இருப்பதையும், பொதுக்குழுவில் எடுக்கப்பட இருக்கும் தீர்மானங்களைப் பற்றியும் சொல்ல வந்த அந்த அறிக்கையில், நீக்கப்படுகிறது, உயர்த்தப் பட்டுள்ளது என்று அச்சிடப்பட்டிருக்கிறது. பொதுக்குழு முடிந்ததும் எழுதப்பட வேண்டியவை களை இதிலே குறிப்பிட்டு தங்களது திறமையைக் காட்டியிருக்கிறார்கள் நிர்வாகிகள்.

பலகோடி நிதி இருப்பைக் கொண்ட இந்தச் சங்கத்தில் சரியான கணக்குகளை உறுப்பினர்களுக் குக் காட்டுவதில்லை. இச்சங்கத்தில் 1. தற்காலிக உறுப்பினர், 2. இணை உறுப்பினர், 3. முழு

# இசைக் கலைஞர்கள் சங்கத்தில் தமிழின் நிலை?



உறுப்பினர், 4. வாழ்நாள் உறுப்பினர், 5. சாதாரண உறுப்பினர், 6. கௌரவ உறுப்பினர் என்று ஆறுவகை உறுப்பினர்கள் இருக்கின்ற விநோதமும் நடந்து வருகிறது. இதில் முழு உறுப்பினர்களுக்கும், வாழ்நாள் உறுப்பினர்களுக்கு மட்டுமே எல்லாச் சலுகைகளும் உரிமைகளும் உண்டு.

இறந்தால் அறுபத்தைந்தாயிரம், கல்வி உதவித் தொகை, மருத்துவ உதவித் தொகை, வட்டியில்லாக் கடன், வாக்களிக்கும் உரிமை இவை எல்லாம் முழுஉறுப்பினர்களுக்கும் வாழ்நாள் உறுப்பினர் களுக்கு மட்டுமே. குறைந்த அளவிலான இந்த வகை உறுப்பினர்களில் தொடர்ந்து பதவிசுகம் கண்டு, பணசுகம் கண்ட சில நிர்வாகிகள் மற்றவர்களை உள்ளே வரவிடாமல் பார்த்துக் கொள்கிறார்கள்.

தொடர்ந்து மிகச்சரியாக 25 ஆண்டுகாலம் ஆண்டுதோறும் சந்தா செலுத்தி வருகிற பலர் இணை உறுப்பினர்களாகவும் தற்காலிக உறுப்பி னர்களாகவும் இருந்து வருகின்றனர் என்பது உச்சபட்ச சோகம். எந்தச் சங்கத்திலும் இல்லாத மற்றொரு விநோதமும் உண்டு. இச் சங்கத்தில் 18 வயது நிறைவு பெற்ற இசைக் கலைஞர்கள் உறுப்பினராகலாம் அதிகபட்ச வயதும் இருக்கிறது. 50 வயதிற்கு உட்பட்டவர்கள் மட்டுமே உறுப்பி னராக முடியும். 51 வயதுள்ள ஒரு இசைக்கலைஞர் சங்கத்தில் சேரலாம். ஆனால், முழு உறுப்பினராக ஆக முடியாது என்ற சட்டமும் உண்டு.

வேலை செய்கிற ஒவ்வொரு நாளும் இசைக் கலைஞர்கள் ரூ 50ஐ சங்கத்தில் கட்ட வேண்டும். இது கட்டாயமான ஒன்று. தற்காலிக உறுப்பினர் கள் முதல் அனைவருமே இந்தக் கட்டணத்தைக் கட்ட வேண்டும். இந்தக் கட்ட ணத்தை இவர்கள் அன்பளிப்பு என்று கூறுவது விந்தையாக இருக்கிறது. பொதுவுடைமைவாதியான எம்.பி.சீனி வாசன் அவர்கள் கலைஞர்களின் நலன் கருதி இந்தச் சங்கத்தை ஆரம்பித்தார். ஆனால், இன்று ஒருசிலர் மட்டுமே பயன்பெறுகிற சங்கமாகவும் பலரது உழைப்பை, சிலர் மட்டும், சங்க விதிகள் என்று சொல்லிக் கொண்டு கொள்ளையிடும் நிகழ்வும் நடந்து வருகிறது.

**இமயவரம்பன்**

# பாவலரேறு பெருஞ்சித்திரனார் கவிதை



எந்தக் கட்சியில் நீ இருந்தாலும்
இனத்தை மறந்திடாதே – தமிழா
இனத்தை மறந்திடாதே – உன்
சொந்தக் குடும்பம் தனைப்பல கருத்தால்
சுட்டுப் பொசுக்கி டாதே – தமிழா
சுட்டுப் பொசுக்கிடாதே.

எந்தத் திசையில் நீ இருந்தாலும்
ஏற்றந் துறந்திடாதே – தமிழின்
எழிலைத் துறந்திடாதே – பழங்
கந்தலை யுடுத்துக் கஞ்சியை யருந்தினும்
கனிவை யிழந்தி டாதே – இனக்
கருத்தை யழித்தி டாதே.

எந்த நிலத்தினில் நீ இருந்தாலும்
இயல்பை மாற்றிடாதே – இனத்தின்
இணைப்பை யறுத்தி டாதே – உன்
முந்தையர் வாழ்ந்த முதுதமிழ் நாட்டின்
மொழியை மறந்திடாதே – உணர்வை
மூளி யாக்கிடாதே.

எந்தப் படையினில் நீ இருந்தாலும்
இனத்தை எதிர்த்திடாதே – தமிழா
எதிரிக் குழைத்திடாதே – உன்
சொந்தத் தமையனைத் தம்பியைக் கொல்லவே
சூழ்ச்சி நினைத்திடாதே – பகைவன்
சோற்றில் நனைந்திடாதே.”


சிறுகதை

இருங்கோவேள்

# வண்டி வாங்க வேண்டும்

சிறிய இரண்டு சக்கரவண்டியை அந்தச் சிறுவன் பார்த்துக் கொண்டே இருந்தான். அது எந்த நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது என்ற தகவல் இல்லை. ஏனென்றால், அந்த வண்டி பல வண்டி களில் இருந்த வெவ்வேறு பாகங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட வண்டியாக இருந்தது. நிறுவனங் கள் தயாரிக்கும் வண்டிகளைவிடச் சிறிய வண்டி. இரண்டு சக்கர வண்டிகளின் பழுதுநீக்கும் கடை யின் முன்புதான் அந்த வண்டி நின்று கொண்டிருந்தது. பார்த்துக் கொண்டிருந்த சிறுவனுக்கு அந்த வண்டியை மிகவும் பிடித்திருந்தது.

சிறுவனின் பெயர் டே தம்பி. அவனுக்கு அப்பா அம்மா யார் என்பதே தெரியாது. அவனுக்கு விபரம் தெரிய ஆரம்பித்தபோது அவனது வயது உள்ளவர்களும் அவனை விட நான்கைந்து வயது பெரிய பையன்களும் பெண்பிள்ளைகளும் அவனை அப்படித்தான் அழைத்தார்கள் ஆகவே தனது பெயர் 'டே தம்பி' என்று அவன் புரிந்து கொண்டான். அவனது பெயர் என்னவென்று அவனிடம் யார் கேட்டாலும் டே தம்பி என்றுதான் சொல்வான். கேட்பவர்கள் சிறிது திகைத்தால் "அதுதாங்க என்பேரு" என்பான். இப்போது அவனுக்கு வயது பதின்மூன்றுதான் ஆகிறது. அவனுக்கு நினைவு தெரிந்த நாள் முதலாய் அண்ணன் அக்காக்களாக இருக்கும் ஐந்து பேருடன் காந்தம் பொருத்தப்பட்ட ஒரு கம்பை தரையில் படுமாறு இழுத்துக்கொண்டு செல்வது தான் அவனது, அவர்களது வேலை. அந்தக் காந்தத்தில் ஒட்டிக்கொள்ளும் இரும்புத் துண்டு களை மொத்தகமாச் சேகரித்து கடைகளில் கொடுத்து சில்லறைகளை வாங்கி தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டனர்.



அழுக்கடைந்த ஆடைகள், அரைவயிறும் கால்வயிறுமாய் உணவு என்பதுதான் அவர்களது வாழ்க்கையின் நெறிகள். அப்படிப்பட்ட நிலையில் அவனுக்கேன் அந்த ஆசை வண்டி வாங்க வேண்டும் என்ற ஆசை. ஆசைகளெல்லாம் தத்தமது நிலைகளை எண்ணி அதற்கேற்றபடியா வருகிறது? ஆசை நினைத்தபோதெல்லாம் வந்துவிடுகிறது. அது நிறைவேறுமா என்பதுதானே முக்கியம். கண்ணம்மாபேட்டை சுடுகாடு நுழைவுவாயில் அருகே இருந்த அந்த, வண்டி பழுதுநீக்கும் கடையைவிட்டு, டே தம்பி விலகுவதாக இல்லை. இவனோடு வந்துகொண்டிருந்தவர்களெல்லாம் தங்கள் தொழில் பக்தியால் என்பதைவிட வயிறு பக்திக்காக முன்னோக்கிச் சென்று கொண்டிருந் தனர். அவர்களில் டே தம்பியைவிட சிறிய வயதுள்ள சின்னஆயி வேலையோடு வேடிக்கையும் பார்ப்பவள். அவள், எங்கே டே தம்பியைக் காணோம் என்று மற்றவர்களிடம் கேட்க, அவர் களோ வந்த வழியோ சிறிது தூரம் காந்தக்கம்பை இழுத்துக்கொண்டே வந்தனர். விட்டுப்போன இரும்புத்துகள்கள் ஒட்டிக்கொள்ளட்டும் என்ற நம்பிக்கையோடு.

கடைக்கருகில் அவனைப் பார்த்து “என்னடா என்ன செய்துகொண்டிருக்கே வா வேலையைப் பார்ப்போம்“ என்றான் கொம்பன். அண்ணா இந்த வண்டி எனக்கு வேணும். இருங்க நான் விலையை விசாரிக்கிறேன் என்று கடைக்காரரிடம் அண்ணே இந்த வண்டிய விற்பீங்களா? என்று கேட்க அவரும் விற்கத்தான் வைத்திருக்கிறோம் என்று கூறவும் அவனது முகத்தில் என்றுமில்லாத மகிழ்ச்சி, அந்த வண்டியை ஓட்டுகின்ற மகிழ்ச்சி தென்பட்டது. இதன் விலை என்ன என்று அடுத்த வினாவைத் தொடுத்தான். கடைக்காரார் இவனாவது வாங்குவதாவது என்ற தோரணையிலும் பாவம் சொல்லுவோம் என்ற இரக்கத்தாலும் ஐந்தாயிரம் என்றார். வேறு யாராவது கேட்டிருந்தால் 6500 என்று சொல்லியிருப்பார். இவனது தோற்றத்தைப் பார்த்துதான் குறைவாகச் சொன்னார். அவன் வேகமாக வந்தான் தனது நண்பர்களிடம் சொன்னான். உனக்கு ஆசையா இருக்கா? அதை உனக்கு வாங்கணும்னா ஒருஆண்டு நாம எல்லோரும் கடுமையா உழைக்கணும் அப்பத்தான் வாங்கமுடியும். வாடா போவோம் என்றாள் மகமாயி அக்கா.

அக்கா கொஞ்ச இரு அக்கா, இந்த வண்டிமேல கொஞ்சநேரம் உட்கார்ந்து பாத்துட்டு வந்துர்றேன் என்று சொல்லிவிட்டு கடைக்காரனை நோக்கி ஓடினான். அவரிடம் அண்ணே கொஞ்சம் உட் கார்ந்து பாக்கலாமா என்றான். ம் என்றார் அவர். வண்டியையே வாங்கிவிட்ட மகிழ்வில் அதில் ஏறி அமர்ந்தான். அவனது நண்பர்கள் அனைவரின் முகத்திலும் பேரானந்தம். பிறகு அவர்கள் சென்று விட்டனர். டேய் தம்பி மட்டும் அந்த வண்டியை விட்டு இறங்கி அதை சுற்றிச்சுற்றிப் பார்த்தான். அவனுக்குள் ஒரு தீர்மானம். இந்த வண்டியை நாம் வாங்க வேண்டும். வாங்கியே ஆகவேண்டும் என்று முடிவு செய்து அந்த இடத்தைவிட்டு நகர மன மில்லாமல் நகர்ந்தான். கடைக்காரரோ, இந்துப் பைய னுக்கு இந்த வண்டி கிடைத்தால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவான், இவனே இந்த வண்டியை வாங்க வந்தால் இன்னும் ஆயிரம் ரூபாய் குறைத்து கொடுக் கலாம். ஆனால் இவனால் இது முடியுமா? என்று பெருமூச்சு விட்டார். ◆

## இறப்பைக் கொண்டாடுவது தமிழர் மரபா?

ஒரு மனிதனோ, உயிரினமோ இறந்து விட்டால் தமிழன் ஒருபோதும் கொண்டாடியதில்லை என்பதுதான் வரலாறு. அநியாயம் செய்தவன் இறந்தால் கூட, அக்கிரமக்காரன் தொலைந்தான் என்று சொல்வதோடு சரி, அதற்குப்பின்னால் அவன் இறந்த நிகழ்வை நினைத்தும் பார்க்கமாட்டார்கள்.

ஆண்டுதோறும் கொண்டாடவும் மாட்டார்கள் தமிழர்கள். அப்படிப்பட்ட தமிழ்ச்சமுதாயத்தில் ‘நெல்வயலில் களை’ போல ஆரிய அநாகரிகங்கள் உள்வந்து இறப்பைக் கொண்டாடும் இழிநிலைக்கு வந்துவிட்டான் தமிழன் என்பது மிகப்பெரும் வேதனை.

முருகன் பிறந்தார், கிருஷ்ணன் பிறந்தார், அதற்காகக் கொண்டாட்டம் என்றால் மகிழ்ச்சி. அது சிறப்பு. நரகாசுரன் இறந்துவிட்டான் கொண்டாடுவோம் என்றால் அது சரியானதல்ல. தமிழர்கள் சிந்திக்க வேண்டும்.

தமிழீட்டி.

11

# புரட்சிக்கவி

பாரதிதாசனார்




# இயற்கை

### 8. கானல்

வானும் கனல்சொரியும் – தரை
மண்ணும் கனல்எழுப்பும்
கானலில் நான்நடந்தேன் – நிழல்
காணும் விருப்பத்தினால்,
ஊனுடல் அன்றிமற்றோர் – நிழல்
உயிருக் கில்லை அங்கே,
ஆன திசைமுழுதும் – தணல்
அள்ளும் பெருவெளியாம்,

ஒட்டும் பொடிதாங்கா – தெடுத்
தூன்றும் அடியும்சுடும்,
விட்டுப் புறங்குதித்தால் – அங்கும்
வேகும், உளம்துடிக்கும்,
சொட்டுப் புனல் அறியேன் ஒன்று
சொல்லவும் யாருமில்லை,
கட்டுடல், செந்தணலில் – கட்டிக்
கந்தக மாய்எரியும்.

முளைத்த கள்ளியினைக் – கனல்
மொய்த்துக் கரியாக்கி
விளைத்த சாம்பலைப்போல் – இனி
மேலும் உருக்கிடவே
கொளுத்தி டும்கானல், – உயிர்
கொன்று தின்னும்கானல்:
களைத்த மேனிகண்டும் – புறங்
கழுத்த றுக்கும்வெளி.

திடுக்கென விழித்தேன் – நல்ல
சீதளப் பூஞ்சோலை:
நெடும் பகற்கனவில் – கண்ட
நெஞ்சுறுத் தும்கானல்
தொடர்ந்த தென்நினைவில்: – குளிர்
சோலையும் ஓடையுமே
கடவ ரும்கனலோ – என்று
தோன்றிய துண்மையிலே.

## 9. மக்கள் நிலை

### சிட்டு

தென்னை மரத்தில் – சிட்டுப்
பின்னும் அழைக்கும் – ஒரு
புன்னை மரத்தினில் ஓடிய காதலி
'போ போ' என்றுரைக்கும்
வண்ண இறக்கை – தன்னை
அங்கு விரித்தே – தன்
சென்னியை உள்ளுக்கு வாங்கிஅச் சேவலும்
செப்பும் மணிவாயால்,
என்னடி பெண்ணே – உயிர்
ஏகிடும் முன்னே – நீ
என்னிடம் வா, எனை யாகிலும் கூப்பிடு,
தாமதம் நீக்கிவிடு'
என்றிது சொல்லப் – பெட்டை
எண்ணம் உயர்ந்தே – அத்
தென்னையிற் கூடிப்பின் புன்னையிற் பாய்ந்தது,
பின்னும் அழைக்கும் சிட்டு.



# நல்ல வழியில் வளரட்டும் தமிழ் மாநில காங்கிரஸ்

● வேர்மகள்

இலங்கைத் தமிழர் பிரச்சனையில் தமிழர்களின் அழிவுக்கு மிக முக்கியக் காரணம் காங்கிரஸ்தான் என்பது எல்லோருக்கும் தெரிந்த செய்தி.

தமிழ் நாட்டு காங்கிரஸ்காரர்கள் தமிழர்களாக இருப்பதா? காங்கிரஸ்காரர்களாக இருப்பதா? என்ற குழப்பத்தில் இனத்தை விடுத்து, அரசியல் பெரி தென்ற எண்ணத்தில் தமிழக காங்கிரஸ்காரர்கள் தமிழர்கள் என்ற நிலை மறந்து காங்கிரஸ்காரர் களாகவே வாழ்ந்து விட்டார்கள்.

பச்சைத் தமிழர் காமராசர், கருப்பையா மூப்பனார் படங்களை உறுப்பினர் அட்டையில் பயன்படுத்தக் கூடாது என்ற தடையை, காங்கிரஸ் கட்சியின் மேலிடம் ஏற்படுத்தியதால் தமிழக காங்கிரசில் உள்ள தன்மானமும் தமிழ்மானமும் உள்ள காங்கிரஸ்காரர்கள் சிலிர்த்தெழுந்திருக்கி றார்கள்.



ப ர ம் ப ரை பரம்பரையாய் கட்சியில் தலைமைப்பதவிக்கு இவர்கள்தான் தகுதியானவர் கள் என்ற மௌடீக எண்ணத்தை விடுத்து, மக்க ளாட்சிக்கு மதிப்புக்கொடுத்து, மக்களுக்குத் தொண்டு செய்கின்ற எண்ணத்தோடு வருகிறவர்களை, தூய்மையானவர்களை தலைமைப்பதவிக்கு கொண்டு வரவேண்டும். தன்குடும்பம், சுற்றத்தார், தம் இனத்தார், தமது நிலப்பகுதியினர், தனது நாட்டினர் என்ற படிப்படியான நிலையிலே சேவை களைச் செய்யும் மனம் உள்ளவர்கள் தலைவர் களாக வேண்டும். குடும்பத்தோடு மட்டுமே நின்று விட்ட தலைவர்கள் நிறைய இருக்கிறார்கள். நேரு குடும்பத்தைப் போன்று. அதே நேரத்தில் நாட்டுக்குச் சேவை செய்கிறேன் என்று கூறிக்கொண்டு, குடும்பத்தையும் தம் இனத்தையும் கவனிக்காமல் விடுபவர்களும் சரியானவர்கள் அல்ல.

இந்த நிலையில்தான் தமிழ்நாட்டின் காங்கிரஸ் காரர்கள் இருக்கிறார்கள். தமிழன் செத்தால் செத்துவிட்டுப் போகிறான். நாம் இந்தியர் என்று சொல்வது எப்படிச் சரியாக இருக்க முடியும். கிளையில் அமர்ந்து கொண்டு அடிமரத்தை வெட்டும் மூடத்தனம் அது. காங்கிரஸ்காரர் களின் பலர் அப்படித்தான் இருந்தார்கள். தனது இனத் தானாகிய தமிழனின் அழிவைக் கண்டுகொள்ளாது, அந்த அழிவுக்குத் துணை நின்ற சோனி யாவை அன்னை என்று கூறிக் கொண்டு அலைந்தவர்களை எப்படி மனிதர்கள் என்று சொல்வது?

இனியாவது வாசன் அவர்கள், பச்சைத் தமிழர் காமராஜரைத் தூக்கிப்பிடித்து அரசியல் நடத்த வேண்டும். இனப்பற்றுக் கொண்டோர் அவரை வாழ்த்துவார்கள். அவர் மேல் எவ்வித கெட்ட பெயரும் கிடையாது. ஆகவே வாசனது கட்சி வளர்வதற்கு நிறைய சாத்தியக்கூறுகள் உண்டு என்பதாக நடுநிலையாளர்கள் எண்ணுகிறார்கள். பழைய தமாகா அளவிற்கு உடனடியாக பெரிய பலனைத் தராவிடினும் சீரான வளர்ச்சியைக் காணும் என்பதுதான் நிலை.

எந்த நேரத்திலும் மனிதாபிமானத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, கடைநிலைத் தொண்டர் களுடன் நல்லுறவைப் பேணி வந்தாலே கட்சி நல்ல நிலையை அடையும். வளரட்டும் தமிழர் காங்கிரஸ் கட்சி.

◆

# ஓர் எழுத்து ஒரு சொல்

ஒரு எழுத்து தனியாக நின்று ஒரு சொல்லாகு மானால் அந்த எழுத்து ஓரெழுத்து ஒரு சொல் (அல்லது) ஓரெழுத்து ஒரு மொழி என்பார்கள்.

ஈ, மை, நீ, கை, கோ, வா, பூ, போ, பை போன்ற ஓரெழுத்து ஒரு சொல்லை பேச்சு வழக்கில் நாம் பயன்படுத்துவோம். ஆனால், தமிழில் நாற்பத்தி இரண்டு ஓரெழுத்து ஒரு சொல் உள்ளது.

ஒரு எழுத்து சொல்லாகி தருகிற அர்த்தங்களோடு பார்ப்போம்.

ஆ - பசு

ஈ - பறவை

ஊ - இறைச்சி

ஏ - கணை

ஐ - தலைவன்

ஓ - வியப்பு

மா - பெரிய

மீ - மேல்

மூ - மூப்பு

மே - மேன்மை

மை - இருள்

மோ - மோதுதல்

தா - கொடு

தீ - நெருப்பு

தூ - தூய்மை

தே - தெய்வம்

தை - மாதம்

சா - சாதல்

சீ - இலக்குமி

சே - எருது

சோ - மதில்

பா - பாட்டு

பூ - மலர்

பே - நுரை

பை - பசுமை

போ - செல்

நா - நாக்கு

நீ - முன்னால் இருப்பவர்

நே - அருள்

நை - இகழ்ச்சியை குறிப்பது

நோ - வலி

கா - பாதுகாப்பு

கூ - வெல்

கை - ஒப்பணை

கோ - அரசன்

வீ - மலர்

வை - வைக்கோல்

வெள - கைப்பற்றுதல்

யா - கட்டுதல்

நொ - துன்பம்

து - உணவு

நன்றி : விவசாயி

# இணையதள வணிகம்



வணிகத்தில் உத்திகளும், வணிகத்தின் தளங்களும் மாறிவிட்டன, பெருகிவிட்டன. அதில் இணையதள வணிகம் என்பது இப்போது கொடி கட்டிப் பறக்கிறது. இணையதள வழியே வர்த்தகம் மேற்கொள்வதில் இந்தியர்கள் தற்போது அதிகமாக ஈடுபட்டு வருகின்றனர். இணையதள மூலமான வர்த்தகம் என்பது நமக்கு சுலபமானது. கூடுதல் பயனளிக்கக்கூடியது என்பதால் தற்போதைய நவீன இளைஞர்கள் இணையதள வர்த்தகத்திற்கு அதிக முக்கியத்துவம் தருகின்றனர்.

தற்போது வெளிநாட்டு நிறுவனங்கள் முதல் உள்நாட்டு நிறுவனங்கள் வரை ஏராளமான இணையதள விற்பனை நிறுவனங்கள் உள்ளன. அனைத்து விதமான பொருட்களையும் கூடுதல் தள்ளுபடி மற்றும் இலவச டெலிவரி என்ற விளம்பரங்களும் தற்போது மக்களை இணையதள விற்பனையின் மீது ஈர்ப்பை உண்டாக்குகின்றன என்றாலும் ஆன்லைன் வணிகத்தில் ஈடுபடும்போது நாம் கவனமாக இருக்க வேண்டும்.

இன்றைய நிலையில் ஏற்கனவே உள்ள பெரிய கடை, நிறுவனங்கள் கூட ஆன்லைன் விற்பனையை மேற்கொள்கின்றன. அத்துடன் ஆன்லைனில் மட்டுமே விற்பனை செய்யும் பெரிய நிறுவனங்களும் உள்ளன. நாம் வாங்க விரும்பும் நிறுவனத்தின் நம்பகத்தன்மையை உறுதி செய்த பிறகே பொருட்களுக்கு விண்ணப்பிக்கவும், விற்பனை மேற்கொள்ளும் நிறுவனத்தின் முகவரி, தொலைபேசி எண் போன்றவை தரப்பட்டுள்ளதா, அந்த தொலைபேசி உண்மையாக இயங்குகிறதா என சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நாம் விரும்பும் பொருளின் படம் மட்டுமே திரையில் காண்பிக்கப்படுகிறது. சில நிறுவனங்கள் அதன் இயக்க வீடியோ மற்றும் தொழில்நுட்ப அம்ச விளக்கங்களும் தருகின்றன. அவற்றைச் சரியாகப் படித்துப் பார்த்து, ஏற்கனவே பொருள் வாங்கியவர் தரும் தகவல்களை படித்துப் பார்த்து அப்பொருளை ஆர்டர் செய்ய வேண்டும். மேலும், பொருளுடன் அதன் விலை மற்றும் டிரான்ஸ் போர்ட் கட்டணம், பேக்கிங் கட்டணம் எவ்வளவு என்பதை தெளிவாக அறிந்து ஆர்டர் செய்ய வேண்டும், சில நிறுவனங்கள் இலவச டெலிவரியை குறிப்பிட்ட பொருட்களுக்குத் தருகின்றன.

நமக்கு பொருட்களை பிடிக்காதபோது அல்லது உடைப்புகள் ஏற்பட்டிருப்பின் அதனை திருப்பிக் கொடுக்கவே எண்ணுவோம். எனவே, நிறுவனங்கள் பொருட்களை திரும்ப பெறும் கால அளவு எவ்வளவு கூறியுள்ளது. அதற்கான நடைமுறை என்ன என்பதை தெரிந்து கொள்ளவேண்டும். சில சமயம் நாம் குறிப்பிட்ட மாடலை தவிர்த்து வேறு மாடலை மாற்றியனுப்பவும் வாய்ப்புண்டு.

நாம் ஆர்டர் கொடுப்பது உறுதி செய்யப்பட்டவுடன் ஆர்டர் கொடுக்கும் பக்கத்தினை எச்.டி. எம்.எல். பக்கமாக சேவ் செய்து கொள்ள வேண்டும். இதில், வங்கி அட்டை எண், பண பரி வர்த்தனைக்கு கொடுக்கப்படும் எண் நாள், பொருள் விலை மற்றும் பிற கட்டணங்களுக்கான முழு தகவல்கள் அனைத்தும் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

கிரெடிட் கார்டு ஸ்டேட்மெண்டை அடிக்கடி சோதித்து பார்த்து கொள்ள வேண்டும். நீங்கள் வாங்காத பொருளுக்கு ஏதும் பணம் எடுக்கப்பட்டுள்ளதா என ஆராய வேண்டும்.

உங்கள் வீட்டில் மற்றும் நம்பிக்கையான அலுவலக கணினி மூலமே ஆன்லைன் வர்த்தகம் மேற்கொள்ள வேண்டும். இணையதள மையங்களில் இதுபோன்ற வர்த்தக நடவடிக்கை மேற்கொள்வது அவ்வளவு பாதுகாப்பானதல்ல. பிரபல கடைகள் மற்றும் நிறுவனங்களின் பெயரில் தோற்றமளித்து வரும் மெயில் மற்றும் தளங்களை நம்ப வேண்டாம். டெபிட் கார்டுகளை விட கிரெடிட் கார்டு பயன்படுத்துவது கூடுதல் பலன்.

◆

# தயாரிப்போம் ஆனால் பார்க்கமாட்டோம்!




84 நோபல் பரிசுகளை பெற்ற ஒரே நாடு இஸ்ரேல். மிகச்சிறிய நாடு, மொத்தமே ஒன்றரைக்கோடி பேர்தான் குடிமக்கள். ஆனால் உலகத்தையே அவர்கள்தான் ஆள்கிறார்கள். எப்படி அவர்களால் முடிகிறது?

அந்நாட்டின் குடிமக்கள் திருமணம் செய்ய வேண்டும் என்றால், ஒரு துறையில் முனைவர் பட்டம் வாங்கி இருக்க வேண்டுமாம். கல்லூரியில் சேர்ந்திடுவதற்கு நிபந்தனை உண்டு.

என்னவென்றால் 5000 டாலர் கொடுத்து ஏதாவது ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து, பதினைந்து பேருக்கு வேலை கொடுத்த பின்பு, அந்நிறுவனத்தின் மதிப்பை 15000 ஆக்கினால்தான் கல்லூரியில் சேர்வதற்கு இடம் கொடுப்பார்களாம்.

இதன் காரணமாகத்தான் இன்றைய உலகில் உள்ள பாதிக்கும் மேலான முக்கிய முன்னணி நிறுவனங்கள் இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்தவையாக இருக்கின்றன. உலகத்தில் உள்ள அனைத்து சிறுவர் கார்ட்டூன் படங்களைத் தயாரிப்பது இஸ்ரேல் நாட்டுக்காரர்கள் தான். ஆனால் அந்தப் படங்களை அந்நாட்டின் குழந்தைகள் பார்ப்பதில்லை. அங்கு அது தடைசெய்யப் பட்டுள்ளது.

தற்பொழுது வங்கிகள் தரும் கடன்கொடுக்கும் திட்டத்தை உலகத்தில் முதன் முதலாக கற்றுக் கொடுத்தது இஸ்ரேல் நாட்டினர்தான். கர்ப்பிணிப் பெண்கள் தொலைக்காட்சி, திரைப்படம் பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை. அதற்குப்பதில் கர்ப்பமாக இருக்கும் பொழுது கணக்கு ஆங்கிலம் போன்ற பல மொழிகளில் பாடம் படிப்பார்களாம்.

அப்பொழுது பிறக்கும் குழந்தை கள் அறிவாளிகளாக பிறக்கின்றனவாம். உலகத்தில் மெத்தப் படித்த மேதாவிகளும் உலகத்தை மறைமுகமாக ஆளும் தந்திரமும் மிக்கவர்கள் உள்ள ஒரே நாடு இஸ்ரேல் தானாம்.

| உமாமகேசுவரி



# தமிழீழப் பாவேந்தர் காசிஆனந்தன்




தமிழீழ விடுதலைப் போராட்டம் நெருப்பின் அலைகளைத் தமிழ்நாட்டில் எழுப்பும் காலம்.

எதிரிகளும் இரண்டகர்களும் எரிச்சலடைந் திருக்கிறார்கள்.

தொலைக்காட்சி நேர்காணல்களிலும் கருத்தரங்குகளிலும் தமிழீழத்துக்கு எதிரான இவர் களின் தொணதொணப்புகளைத் தாங்க முடிய வில்லை. குழப்புகிறார்கள்.

தமிழ்த் தேசிய இனத்துக்கு எதிரான இவர்களின் பொய்ப் பரப்புரைகளை இந்நூல் தகர்த்து நொறுக்கும் தவிடுபொடியாக்கும்.

தமிழீழ மண்ணின் விடுதலை தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவை என்பதை இந்நூல் தக்க சான்று களுடன் நிறுவும். தமிழீழ விடுதலைப் போராட்டத் தின் நேர்மையான நோக்கத்தை தூய்மையான தொடர்பயணத்தை இந்நூல் விளக்கும். தமிழர் களின் ஈழவிடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தும் எதிரியின் முகத்தில் இந்நூல் ஓங்கி அறையும்.

சிங்கள இனவெறி அரசுப் படையின் வேட்டை நாய்கள் மூன்று இலட்சம் ஈழத் தமிழர்களை 65 ஆண்டுகளாய் (1948- 2013) குண்டுகளால் துளைத் தும் கத்திகளால் குத்திக் கிழித்தும் அடித்தும் உயிரோடு எரித்தும் உயிர் சிதைத்தும் பிணங்க ளாய்க் குவித்த கொடிய வரலாறு பத்தாயிரம் தமிழ்ப்பெண்களைச் சிங்களப் படைவெறியர்கள் பதைக்கப் பதைக்கப் பாலியல் வன்கொடுமைக்கு இரையாக்கிப் பிணங்களாய்ப் போட்ட வெறிக் கூத்து வரலாறு இரண்டாயிரத்து எழுபத்தாறு சைவக் கோயில்களைக் குண்டு வீசி நொறுக்கிய இனவெறிச் சிங்களவனின் மதவெறி வரலாறு தொண்ணூறாயிரம் தமிழ்ப் பெண்களை, கணவர் களை இழந்த கைம்பெண்கள் ஆக்கி, அவர்கள் இல்லறத்தைத் தொலைத்துக் கட்டிய சிங்களக்

கொடுங்கோலர்களின் வன்முறை வரலாறு தமிழர் களின் இரண்டு இலட்சம் வீடுகளைச் சிங்களப் போர் விண்ணூர்திகள் குண்டு பொழிந்து கற்குவிய லாய்த் தகர்த்தெறிந்த கொடுவெறி வரலாறு தமிழீழத்திலும் தமிழீழத்துக்கு வெளியிலும் இருபது இலட்சம் தமிழர்களை ஏதிலிகளாக புலம்பெயர் தமிழர்களாக ஓட விரட்டி அடித்த இனவெறிச் சிங்களத்தின் அடக்குமுறை வரலாறு 1833க்கும் 1976க்கும் இடைப்பட்ட 143 ஆண்டுகள் இடை வெளியில் தமிழர் தாயகத்தில் 15000 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பைத் தட்டிப் பறித்தெடுத்துச் சிங்கள நாடாக்கிய சிங்கள இனவெறி அரசுகளின் மண்பறிப்பு வரலாறு தமிழீழ மக்களுக்கு இறை யாண்மை கொண்ட தமிழீழத் தனி அரசு ஒன்றே தீர்வு என்பதை உறுதிசெய்கிறது.

**உளறலும் உண்மையும்**

'இலங்கைக்குத் தமிழ்நாட்டில் இருந்து பிழைக்கப்போன தமிழர்கள் தமிழீழம் கேட்க லாமா? என்று பிதற்றுவோர் இருக்கிறார்கள்.

வரலாற்றை ஆழமாகப் படிக்காத அறிவின் வறுமையே இது.

தமிழீழம் பண்டையத் தமிழர் தாயகம் என்பதை இவர்களுக்கு விளக்க வேண்டிய கடமை தமிழீழப் பற்றாளர்களுகு உண்டு.

மகாவம்சம் போன்ற கட்டுக் கதைகளை மஞ்சள் உடைப் புத்த பிக்குகளின் மதவெறிப் புனைவுகளை அல்ல அறிவியல் அடிப்படையிலான வரலாற்று உண்மைகளை மக்கள்முன் வைப்போம்.

**தாயகம்**

குரங்கில் இருந்து மாந்தன் தோன்றினான். தொடக்கத்தில் அவன் பேசும் குரல்வளை அமைப்பைக் கொண்டிருக்கவில்லை. வளர்ந்தான். கோமோசாப்பியன்சு என்னும் மாந்த இனநிலையை அடைந்த போது பேசும் ஆற்றலை அவன் பெற்றான். ஆப்பிரிக்காவில் தோன்றிய மாந்தன் ஆப்பிரிக்கா வுக்கும் ஆத்திரேலியாவுக்கும் இடைப்பட்ட நிலப் பரப்பின் கடற்கரையை ஒட்டி மேலும் விரிந்து கடலின் உள்ளே கிடந்த கண்டத் திட்டு வழியாகக் கிழக்கு நோக்கிப் பயணம் ஆனான்.

இன்றைக்கு 50,000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடும் இலங்கைத் தீவும் கண்டத் திட்டுகளும் ஒன்றாய் இருந்த பெரு நிலப்பரப்புக்குப் பேசும் ஆற்றல் கொண்ட மாந்தன் வந்து சேர்ந்தான்.

வரலாற்றாய்வில் இரு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. ஆப்பிரிக்காவில் இருந்து வரும் போதே தமிழ்மொழியின் மூல வேர்ச்சொற்கள் சிலவற்றை மாந்தன் தெரிந்திருந்தான் என்பது ஒன்று. தமிழ்நாடும் தமிழீழமும் இணைந்திருந்த நிலப்பகுதியை அவன் அடைந்தபின்புதான் தமிழ்மொழி தோன்றிற்று என்பது ஒன்று.

ஆப்பிரிக்க மொழிகளிலும் ஓரிரு தமிழ்ச் சொற்கள்தான் காணப்படுகின்றன. அங்கிருந்து வந்த மக்கள் சென்று குடியேறிய ஆத்திரேலியாவின் பழங்குடி மக்கள் மொழியிலும் ஓரிரு தமிழ்ச் சொற்களே காணப்படுகின்றன. வடக்கு நோக்கிய தமிழர் குடிப்பெயர்ச்சியின் விளைவான அரப்பா மொகஞ்சதாரோ (சிந்துவெளி நாகரிகம்) சுமேரியர் மண் ஆகிய இடங்களில் கிடைக்கும் பண்டை மொழிகளிலும் சில தமிழ்ச் சொற்களே காணப்படு கின்றன. தமிழ்நாட்டில் தமிழ் முழுஅளவில் உயிர்கொண்ட மொழியாகத் திகழ்வதால் இங்கே தான் தமிழ் தோன்றியிருக்க வேண்டும் என்பார் பாவாணர்.

தமிழ்நாட்டின் சிறந்த வரலாற்றறிஞர் பி.இராமநாதன் தமிழ் நாட்டிலிருந்து கிழக்கு நோக்கியும் வடக்கு நோக்கியும் நிகழ்ந்த (கி.மு.50,000) தமிழர் குடிப்பெயர்ச்சி பற்றிப் பதிவு செய்துள்ள கருத்தை உலகப் புகழ்பெற்ற மொழிஇயல் அறிஞர் இசுதெபான் கில்யர் லெவிட் உறுதி செய்கிறார்.

**'லெவிட் எழுதுகிறார்:**

'கடல் மட்டம் இப்பொழுதை விட மிகக் குறைவாக இருந்த பனியூழிக் காலத்தில், ஆப்பிரிக்கா தென்னிந்தியாவை இணைத்த வால்போன்ற நில இணைப்புகள் / தீவுகள் வழியாக ஆப்பிரிக்காவில் இருந்து தென் ஆசியாவுக்கு (தமிழ்நாடு தமிழீழம்) திராவிட மொழி பேசுநர் வந்திருக்கலாம் என்னும் கோட்பாட்டை பி.இராமநாதன் வலியுறுத்துகிறார். அக்கோட்பாட்டை நானும் ஆதரிக்கிறேன். ஆத்திரேலியப் பழங்குடி மக்கள் பற்றி ஆய்வு செய்த அறிஞர் அம்மக்களின் மொழிகள் திராவிட

மொழிகளுடன் மட்டுமே தொடர்புள்ளவை எனக் கண்டுள்ளனர். உறவுமுறை பூமராங் (வளைதடி) பயன்பாடு ஆகியவையும் அம்மக்களுக்கும் திராவிடர்களுக்கும் (தமிழர்கள்) உள்ள தொடர்பைக் காட்டுகின்றன.

கி.மு.6000ஐ ஒட்டி உல கெங்கும் கடல் மட்டம் உயர்ந்து நிலப்பகுதிகளின் பரப்பு சுருங்கிய பொழுது, உலகின் பிற பகுதி மக்களின் நாகரிகங்களில் இருந்து துண்டிக்கப் பட்டனர் ஆத்திரேலியப் பழங்குடி மக்கள். அவர்கள் தென்இந்தியாவில் இருந்து ஆத்திரேலி யாவுக்குப் புலம் பெயர்ந்தது ஏறக்குறைய 40,000 ஆண்டுகளுக்கு முன்னராக இருக்கலாம் என்கின்றனர் ஆத்திரேலிய அறிஞர்கள்.

இதிலிருந்து குறைந்தது 40,000 ஆண்டுகட்கு முன்னரே திரா விடர் (தமிழர்) இந்தியாவில் இருந்தனர் என்பது தெளிவாகிறது. இந்தத் 'திராவிடர் ஏற்றம்' கோட் பாட்டின்படி திராவிட மொழி பேசுநர் தென்னிந்தி யாவில் இருந்து வடநாடு செல்கின்றனர். பின்னர் அங்கிருந்து பாரசீகத்திற்கும் அதைத் தாண்டிப் பிறநிலப் பகுதிகளுக்கும் செல்கின்றனர். அந்தப் பிறநிலப் பகுதிகளில் மூல திராவிடக் குடும்பத்திலி ருந்து பிரிந்து உராலிக், அல்தாயிக், இந்தோ ஐரோப்பியம் ஆகிய மொழிக் குடும்பங்கள் உருவாகின்றன.

ஓபன் கைமர் 2003இல் எழுதிய நூலின்படி மரபணு ஆய்வும் இந்தியாவில் இருந்து வடக்கு வடமேற்காக ஏறத்தாழ 50,000 ஆண்டுகளுக்கு முன்னர் மைய கிழக்கு மைய ஆசியா ஐரோப்பா என்றவாறு படிப்படியாகப் பரவியிருக்கலாம் என்னும் கோட்பாட்டிற்கு ஆதரவாகவே உள்ளது.

அகண்ட தமிழக நிலப்பரப்பில் இருந்து கி.மு.8000இல் தான் இலங்கைத் தீவு பிரிந்ததாய் வரலாற்றாய்வாளர்கள் கருதுகின்றனர். இது உண்மையானால் 50000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழும் தமிழினமும் தோன்றிய நம் அன்னைமண் தமிழ்நாடும் இலங்கைத் தீவுமே என்பதில் ஐயம் இல்லை.

இன்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பு கற்காலத்திலும் அதைத் தொடர்ந்த இரும்புக் காலத்திலும் பண்டைய மாந்தர் கந்தரோடை, ஆனைக்கோட்டை, வேலணை, காரைதீவு, புத்தளம், பொம்பரிப்பு, கதிரவெளி, பூநகரி, முல்லைத்தீவு, மாமடு, பரங்கியாறு, மாதோட்டம் ஆகிய இடங்களில் வாழ்ந்ததற்கான சான்றுகள் அகழ்வாய் வில் கிடைத்துள்ளன. இவை அனைத்தும் பண் டைத் தமிழர்கள் வாழ்ந்த பழந்தமிழ் ஊர்க ளேயாகும்.

தென்தமிழ் ஈழத்தில் பட்டிப்பளை ஆற்றுக்குப் பக்கத்தில் கண்டெடுக்கப்பட்ட இரும்புக்காலப் பிராமிக் கல்வெட்டு ஒன்றில் தமிழ்ப்பெண் பற்றிய குறிப்பொன்றுள்ளது. இக் கல்வெட்டு குடுவில் என்னும் இடத்தில் உள்ளது. பிராகிருத மொழியில் 'தமெட்' என்றழைக்கப்பட்ட தமிழ்மக்கள் அக்கரைப்பற்றுப் பகுதியில் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தார்கள் என்று தெரிந்துகொள்கிறோம்.

கடலைத் தாண்டி 2500 ஆண்டுகளுக்கு முன்பு வங்கம் ஒரிசா பகுதியில் இருந்து ஆரியர்கள் இலங்கை வந்தார்கள் என்று கி.பி.6ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மகாவம்சம் கூறுவது வரலாறல்ல கட்டுக்கதையாகும்.

வரலாற்று ஆய்வாளர் பேராசிரியர் இந்திரபாலா தன் வரலாற்று ஆய்வுக்குறிப்பொன்றில் இவ்வாறு சொல்கிறார்:

'மொழி, எழுத்து, தொழில்நுட்பம், பயிர்ச் செய்கை போன்ற முக்கியமான துறைகளில் பெரும் முன்னேற்றங்களும் மாற்றங்களும் ஏற்பட்ட காலம் ஆதி இரும்புக் காலம், அரசியல், சமூக, பண்பாட்டு மாற்றங்கள் பல அக்காலத்தில் நிகழ்ந்தன. கற்கால மக்கள் இம் மாற்றங்களால் பெரிதும் முன்னேறினர். இதனால் இலங்கை மக்களுடைய வரலாறு தொடக்கம் பெற்றது.

இத்தகைய வளர்ச்சியை ஆரியர் வந்து குடியேறியதன் விளைவாகத் தொடங்கிய வரலாறாக இதுவரை வரலாற்று அறிஞர்கள் கூறிவந்தமை பொருத்தமற்றது. ஆரியர் என்போர் இலங்கைக்கு வந்து குடியேறியதற்கோ முன் வாழ்ந்த மக்கள் அழிக்கப்பட்டமைக்கோ தொல்லியல் சான்றுகள் இல்லை".

**தொடரும்...**




மெஞ்ஞானி




# கத்தி கூர்மையானதுதான், ஆனால் அது யாருடையது?

விருகம்பாக்கத்திலுள்ள திரையரங்கில் கத்தி படத்தைப் பார்த்தபோது முருகதாஸ் மேல் ஒரு மரியாதை ஏற்பட்டது. மண்ணைக் காக்கத் துடிக்கும் மறவனாகத் தெரிந்தார் முருகதாஸ். திரைப்படம் எடுக்கப்பட்ட விதம் அப்படி. எதார்த்தமான சிறு சிறு நிகழ்வுகள், பரபரப்புக்கு மட்டுமே காதுகொடுக்கும் ஊடகங்கள், எதையும் விலைக்கு வாங்கிவிடலாம் என்ற நினைவில் அலையும் பன்னாட்டு நிறுவனங்கள், அரசியல்வாதிகள், பணக்காரர்களின் ஊழல்களுக்கு லாலிபாடும் அரசுகள் என்று பல உண்மைகளை படமாக்கியிருக்கிறார். பார்த்தவர்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள்.

ஆனால் கத்தி படத்தின் கதை என்னுடையது, ஒவ்வொரு காட்சிகளும் எனது மனதில் உருவெடுத்தவை அவைகளை தனதாக்கிக் கொண்டு என்னை ஏமாற்றுகிறார், ஏழாம் அறிவு தலைப்பே என்னுடையதுதான், சிறிய சந்தேகத்தின் அடிப்படையில் கத்தி படத்தின் கதையை, படம் வெளிவருவதற்கு முன்னே நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறேன். அதை வாங்கிப் பார்த்தால் கதை யாருடையது என்பது வெளியுலகிற்குத் தெரிந்துவிடும் என்று சொல்கிறார் கோபி என்பவர்.

கோபி என்ற படைப்பாளி சொல்கிற அந்த ஒளிப்படக்காட்சி முகநூலில் சுற்றி வருகிறது. என்னை மூன்று முறை நேரிலும், பலமுறை தொலைபேசியிலும் பேசிய முருகதாஸ் என்னைப் பார்க்கவே இல்லை என்று சொல்வது மிகப்பெரிய பொய் என்கிறார் அவர்.

நல்ல படங்களைத் தருகிற முருகதாஸ் அதற்குத் தகுதியானவரா? திரையுலகத் திற்கு சில உண்மைகள் தெரிந்தாலும் அனைத்து உண்மைகளும் வெளிவரவேண்டும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது.

அறிவுத் திருட்டு நடந்தாலும் அது தண்டனைக் குரியதாக வேண்டும். வெற்றி கண்ட கதைகளுக்கு நான்தான் உரித்து என்று சொல்கிற ஏமாற்றுக்கும் தண்டனை கொடுக்க வேண்டும். இந்தப் பிரச்சனையின் முடிவு ஏதோ ஒரு வகை தவறை சரியாக்கும் என்பதே மக்களின் மனப்போக்கு.

◆

பி.எம்.பாலா

# சீனாவின் வால் ஆடுகிறது

எமர்சன், வில்சன், பிரசாந்த், அகஸ்டஸ், லாங் லெட் ஆகிய ஐந்து தமிழ் மீனவர்களுக்கு கொழும்பு நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்துள்ளது. மரணதண்டனையே இருக்கக்கூடாது என்று பன்னாட்டுச் சமூகம் பேசிக்கொண்டிருக்கிற சூழலில் இப்படியொரு தீர்ப்பு. பல நாடுகளில் மரண தண்டனையே இல்லை என்ற நிலையும் இருக்கிறது. வாழ்நாள் சிறைத்தண்டனை கூட அதிக ஆண்டுகள் இருக்கக்கூடாது என்ற சீர்திருத்தம் எல்லாம் வந்து கொண்டிருக்கும் நாட்களில் இந்தியக்குடிமக்களுக்கு இலங்கை தூக்குத் தண்டனை கொடுக்கிறது என்றால் அந்த நாட்டிற்கு வந்திருக்கும் அசட்டுத் துணிச்சல் தான் காரணம்.

இந்தியக் குடிமக்களுக்குத் தூக்குத் தண்டனை கொடுக்கும் அளவுக்கு இராசபக்சே வந்தான் என்றால் அதற்கு முழுமுதல் காரணம் இந்தியாதான். என்றென்றும் இந்தியாவிற்கு ஆதரவளித்து, இந்தியாவின் பாதுகாப்புக்கு தெற்கில் ஒரு அரணாக இருந்து வந்த ஈழத்தமிழர்களைக் கொன்றழித்த ராசபக்சேவுக்கு உறுதுணையாக இருந்த இந்தியா தான் காரணம். விடுதலைப்புலிகள் இல்லை என்ற ஒரு துணிச்சலில் சீனாவுடன் கைகோர்த்துக் கொண்டு இந்தியாவை மிரட்டும் நிலைக்கு வந்து விட்டது இலங்கை.

கொழும்பு கடற்கரைப் பகுதியில் இரண்டாவதாக ஒரு நீர்மூழ்கிக் கப்பலைக் கொண்டு வந்து நிறுத்திவிட்டது சீனா, கச்சத்தீவிலும் சீன இராணுவம். இவற்றை எல்லாம் இந்தியா வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. இந்தியத்தின் தென்பகுதியான தமிழர் பகுதியில் எந்தத் பயங்கரவாதியாவது நுழைந்தானா? குஜராத்தில நுழைந்தது போல் பயங்கரவாதிகள் தமிழக கடலோரப் பகுதிகளில் நுழைந்தார்களா? விடுதலைப்புலிகள் உள்ள வரை இல்லை. அவர்கள் நமக்கும் அரணாக இருந்தார்கள். இனி என்ன நடக்கப் போகிறதோ தெரியவில்லை. பயங்கரவாதிகளோடு சீனாவின் இராணுவமும் தென்பகுதியில் நுழைவதை எப்படி இந்தியா தடுக்கப்போகிறது? தெரியவில்லை.



2011 ஆம் ஆண்டு எல்லை கடந்து வந்து மீன் பிடித்தார்கள் என்பதற்காக கைது செய்யப்பட்ட தங்கச்சி மடத்தைச் சேர்ந்த

ஐந்து மீனவர்கள் மேல் போதைப் பொருள் கடத்தினார்கள் என்று பொய் வழக்குப் புனைந்து தூக்கு மேடையும் தயார் செய்துவிட்டனர். இந்தியாவின் உளவுப்பிரிவே இது பொய்வழக்கு என்று சொல்லியிருக்கிறது. இந்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் சையது அக்பருதீன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தமிழகத் தின் 5 மீனவர்களும் குற்றமற்றவர்கள் என்று கூறியிருக்கிறார். என்றாலும் இலங்கை நீதிமன்றம் இப்படியொரு மதம்பிடித்த தீர்ப்பைக் கூறியுள்ளது என்றால் இந்தியா தனது கைப்பாவை என்றுதானே இலங்கை நினைத்திருக்கும்.

இந்தியாவிலிருந்து கோடி கோடியாக பணம் இலங்கைக்குச் செல்கிறது மறுசீரமைப்பு உதவி என்ற போர்வையில், நல்ல மனிதன் ராசபக்சேவை? சிறப்பாக அழைத்து அவனுக்கு சிவப்புக் கம்பள மரியாதை கொடுத்து, விருந்து கொடுத்து அனுப்பு கிறது இந்தியா என்றால், அவன் இதுவும் செய்வான் இதற்கு மேலும் செய்வான்.

தேர்தல் என்றால் எதிரெதிர் திசைகளில் நிற் கின்ற பாரதிய சனதாவும் காங்கிரசும் ஈழத் தமிழர் பிரச்சனை என்றாலும் இந்தியத் தமிழர் பிரச்சனை என்றாலும் மாமன் மச்சான்களாக மாறிப்போகும் மருமம் தான் புரியவில்லை. தேர்தல் மூலம் மாற்றம் வந்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணுகிற தமிழர்களின் வாழ்வில் தொடர்ந்து மரணங்கள் தான் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை காண்கிற நாடு என்பது உண்மையானால் இந்தியத் துணைக் கண்டத்தின் குடிமக்கள் யாரேனும் ஒருவருக்குப் பிரச்சனை என்றால் வேறுபாடுபாராமல் அவரைக் காக்க வேண்டும்.

உயருக்கே ஆபத்து என்றால் மிக விரைவாக அவர்களைப் பாதுகாக்க வேண்டும். தமிழக மீனவர் களுக்குத் தூக்கு என்ற இந்தப் பிரச்சனையிலும் மிக வேகமான தனது செயல்பாடுகளால் அவர்களை விடுவிக்க வேண்டும்.

இலங்கைஅரசு தண்டனை விதித்து அதை நிறைவேற்றுமானால் இந்தியாவின் மரியாதை உலகளவில் கீழான நிலைக்குச் சென்றுவிடும்.

◆

## தமிழ் - தமிழர்

தமிழ் பேசும் மக்கள் உலகில் சுமார் 100 மில்லியன்

சுமேரியன், அராபிக், மாயன், மீசோ, பெர்சியன், துருக்கி இம்மொழிகள் உருவாக்கத்தில் தமிழும் ஒரு காரணமாக இருந்திருக்கிறது.

சுமேரியன் மொழி குறியீடுகள் (script) தமிழ் சுமேரியன் இரண்டிற்குமுள்ள உறவை வெளிப்படுத்து கிறது.

3000 வருட பழைமையான நூல் தொல்காப்பியம்.

உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள்.

◆

## 12 தமிழ் மாதங்கள்

| தமிழ் | சமஸ்கிருதம் | திரிபு |
|---|---|---|
| சுறவம் | புனர்தை | தை |
| கும்பம் | மகசி | மாசி |
| மீனம் | பல்குணா | பங்குனி |
| மேழம் | சைத்திரம் | சித்திரை |
| விடை | வைசாகி | வைகாசி |
| ஆடவை | மூலன் | ஆனி |
| கடகம் | உத்திராடம் | ஆடி |
| மடங்கல் | அவிட்டம் | ஆவணி |
| கன்னி | புரட்டாதி | புரட்டாசி |
| துலை | அகவதி | ஐப்பசி |
| நளி | கிருத்திகா | கார்த்திகை |
| சிலை | மிருகசீரச | மார்கழி |

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA
மனித வாழ்வில் மகத்தான் நம்பிக்கை!
இந்திய வாழ்வு காப்பீட்டுக்கழகம்.
வாழ்வுக்கு காப்பீடு தேவை.
உங்கள் தேவையை
எங்களிடம் சொல்லுங்கள்
நிறைவேறும் நிச்சயமாக!
9790764721
எல்.ஐ.சி முகவர்.

# முல்லை நீதான்!

பாவலர் சீனி.சுந்தரமூர்த்தி
எம்.ஏ., எம்.ஏ., எம்.எட்.,



இப்படித்தான் வாழ்ந்திருந்தோம்! கொஞ்ச காலம்
இணையில்லா கொள்கையுடை பெண்மை யானாய்!
எப்படியோ! வந்தநோயால் உனது மேனி
இளைத்தேதான் போனதடி! தெரியவில்லை!
அப்படித்தான் விதியேதான்! கதியே! செய்ய
அன்பன்நான் என்செய்வேன்! அன்பி னின்றி
அப்பப்பா! நான்அழவே! பிரிவை நீயும்
அஞ்சாமல் ஏற்கவைத்தாய்! முல்லை நீதான்!

உள்ளத்தில் நிறைந்திருந்த ஆசை தேய்த்தே
உள்ளியெனைப் பார்க்காமல் தவிக்க விட்டே
எள்ளைப்போல் முனைமுறியச் செய்தாய்! நானும்
எப்படித்தான் வாழ்ந்திடுவேன்! நீயும் சொல்வேன்
துள்ளிவிழும் மீன்யாவும் தரையில் வீழ்ந்து
துடிதுடித்து இறத்தல்போல் என்னை யாக்கி
நள்ளாவும் கன்றிழந்து அலறல் போல்
நல்லவளே! மறந்தனையோ! முல்லை நீதான்!

மணமுடித்து ஓராண்டு முடிய வில்லை!
மனக்கதவைத் திறந்துவைக்க நினைக்கவில்லை!
பெண்ணியல்பாம் பேணலெனும் பெருமை
யெல்லாம்
பேருலகின் கூற்றாம்நீ பொய்க்கச் செய்தாய்!
மண்ணிலுள் புழுவெல்லாம் இரையாய்க் கொள்ள
மறைந்தனையோ! முழுநிலவை கையில் அள்ள
விண்வெளியில் பறந்தனையோ! "ஐயோ!" என்றே
விளம்பிடவே! சொல்லினையோ! முல்லை நீதான்!

கார்போன்ற கூந்தலினைத் தொட்டுக் கொஞ்சி
கண்ணிமைக்கப் போகையிலே பாரிக் கோயில்
சீர்பெறவே! புதுப்பித்தாய்! ஆனால் இன்றோ!
சிதைத்திட்டாய்! சிந்தனையில் என்ன கண்டாய்!
ஏருழவர் விதைவிதைத்து பயிர்வி ளைய
எங்கிருந்தோ! வந்தபுயல் அழித்தல் போல
நீருள்ளே பாசியைப்போல் பற்றி நின்றாய்!
நலஞ்சேர்க்க மறந்துவிட்டாய்! முல்லை நீதான்!

கூட்டைத்தான் விட்டெங்கே! சென்று விட்டாய்!
குறும்பாகப் பேசும்மொழி வெறுத்தே போனாய்!
ஆட்டந்தான் ஆடினாய் அலையைப் போலும்
அசைந்தாடும் தென்றலென நினைத்திருந்தேன்!
வாட்டந்தான் எனைப்பற்றச் செய்தாய்! நீதான்!
வனிதைஉன்றன் பெருமையெலாம் எடுத்தே சொல்லக்
காட்டிடையில் கல்லறையில் நீயும் வாழ
கரைக்காணாத் துயர்தந்தாய்! முல்லை நீதான்!

சிறுகதை

ஏழுமலை

# நட்பு

"நீ போயிடுறா மாப்ள, நான் பாத்துக்கி றேன்டா, நீ இங்க நின்னா இந்த போலீசுக்காரனுக உன்னயும் உட்காரச் சொல்லிடுவானுங்க நீ போடா" என்றான் அன்பானந்தம். "அது எப்டிடா நான் செஞ்ச தப்புக்கு நீ ஏன்டா தண்டனை அனுபவிக் கணும்" என்று கேட்டான் இளஞ்செழியன். "டேய் நான் சொல்றதக் கேளு, நீ ஒழுங்கா ஊரு போயிச் சேரு" என்று அன்பானந்தம் சொல்லிக் கொண்டி ருக்கும் போதே ஒரு காவலர் வந்து, நீ யாருடா, நீயும் சேந்துதான் அந்த ஆளோட மண்டைய உடச்சியா? என்று கேட்க, இடையில் குறுக்கிட்ட அன்பா னந்தம் "அவரு என் நண்பர் சார், என்னய பாக்க வந்திருக்காரு இப்பப் போயிடுவாரு" சொல்லிக் கொண்டே, கண்களால் இளஞ்செழியனை போ என்று கட்டளையிட அவன் போக மனமில்லாமல் அந்த இடத்தைவிட்டு அகன்றான்.

பேருந்து நிலையம் சென்று வேலூருக்குச் செல்லும் பேருந்தில் ஏறி அமர்ந்தான். பேருந்தில் கூட்டம் இல்லை. பயணிகள் இன்னும் வரட்டும் என்ற நினைவில் ஓட்டுநர் வருவோர் போவோரைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தார். நடத்துநர் வேலூர் வேலூர் என்று கத்திக் கொண்டே இருந்தார். இளஞ்செழியனுக்கோ நேற்று நடந்த நிகழ்வுகள் கண்முன்னே வந்து போயின. அன்பானந்தமும் இளஞ்செழியனும் இளமையிலி ருந்தே நண்பர்கள். இளஞ்செழியனுக்கு திருமண மாகி ஒரு மகனும் இருந்தான். ஆனாலும் தன் நண்பனைப் பார்க்காமல் அவனால் இருக்க முடிவ தில்லை. அப்பா, அம்மாவைப் பார்க்கப் போகிறேன் என்று மனைவியிடம் கூறிவிட்டு அடிக்கடி சென்னை வந்துவிடுவான். சென்னை வந்தால் பெற்றோரைப் பார்த்துவிட்டு மற்ற நேரமெல்லாம் நண்பனோடுதான் அலைவான்.

அவனது பெற்றோர், "ஏன்டா அவனுக்குத்தான் கல்யாணம் ஆகல, பொறுப்பில்லாம சுத்திக்கிட்டு வரான். உனக்கு கல்யாணம் ஆகி ஒரு புள்ளையும் ஆயிப்போச்சு, நீயும் அவனோடு சேந்துட்டு இப்படி ஊரச் சுத்தலாமாடா'' என்று வருகிற நேரமெல்லாம் கேட்பார்கள். அவர்கள் இப்படிப் பேசும்போது எதுவும் பேசாமல் உம்மனாமூஞ்சியாக நின்று விட்டு, அடுத்த



ஐந்தாவது நிமிடத்தில் நண்பனோடு அரட்டை அடித்துக் கொண்டிருப்பான் இளஞ் செழியன்.

நேற்றும் அப்படித்தான் காலை 11 மணிக்கு சென்னை வந்து சேர்ந்த இளஞ்செழியன், வீட்டிற்குச் சென்று பெற்றோரிடம் முகத்தைக் காட்டிவிட்டு நண்பனைப் பார்க்க வந்துவிட்டான். மதியம் இரு வரும் உணவு விடுதியில் சாப்பிட்டார்கள். நிறைய பேசினார்கள், சிரித்தார்கள், கிண்டலடித்தார்கள், மாலை ஏழு மணிக்கு டாஸ்மாக் கடை அவர்களை அழைத்தது. அன்பானந்தம் மதுவை வாங்கினான். “மாப்ள மதியம் வீட்ல சாப்பிடல, அப்பா அம்மா திட்டுவாங்க ஒரே ஒரு பெக் போட்டுட்டு நான் போறேன்டா” என்று இளஞ்செழியன் சொல்ல, “உன்னைய வீட்ல சாப்பிடக்கூடாதுன்னு சொன் னேனா, நீ போய் வீட்ல சாப்பிடு மாப்ள, இப்ப ஆளுக்குப் பாதியா இதக் காலி பண்ணுவோம்“ என்றான் அன்பானந்தம்.

அரைகுறை மனதுடன் கொஞ்சம் கொஞ்சமாக மது சிறுமூளையை மயக்கிக் கொண்டிருந்தது. கடைசி பெக் குடித்துவிட்டு இளஞ்செழியன் பக்கத் தில் யார் வருகிறார்கள் என்பதைப் பாராமல் எச்சிலைச் துப்ப, அது அந்த வழியாக வந்து கொண்டிருந்த வரதன் மேல் பட, அவன் யாருடா எச்சிலைத் துப்பியது என்று கத்தவும், என்னடா மரியாதை இல்லாம அவன் இவன்னு பேசுறே என்று இளஞ்செழியன் வரதனை அடிக்க, வரதனும் அடிக்க, நண்பனுக்காக வரதனிடம் சண்டை போட வந்த அன்பானந்தம் ஒரு கட்டையை எடுத்து வரதனின் தலையில் போட வரதனின் தலையில் இரத்தம் ஒழுகத் தொடங்கியது. மண்டைய உடச் சிட்டீங்களடா என்று வரதன் சப்தமிட்ட போது தான் நண்பர்கள் தன்நினைவுக்கு வந்தார்கள்.

அந்த வழியே வந்துகொண்டிருந்த ஒரு காவலர் வேகமாக வந்ததைப் பாாத்த அன்பானந்தம் போலீசு வரான்டா ஓடுடறா மாப்பிள்ளை என்று சொன்ன தும் இருவரும் வேறு வேறு திசைகளில் இருட்டில் ஓடி மறைந்தனர்.

இளஞ்செழியனோ ஓடிய களைப்பில் ஒரு இடத்தில் உட்கார்ந்தான் எந்த இடம் என்று தெரியவில்லை. யாரோ தன்னை துரத்திக் கொண்டு வருவதாகவே நினைத்து அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டான். குடித்தது கொஞ்சம் இறங்கினாலும் இனிமேல் வீட்டுக்குச் செல்ல முடியாது என்ற நிலையில் அங்கேயே தூங்கிப் போய்விட்டான். காலையில் சூரியன் எழும்புவதற்கு சற்றுமுன்தான் அவனுக்கு விழிப்பு வந்தது. இரவு முழுவதும் இடுகாட்டிலே படுத்திருந்தது அப்போது தான் அவனுக்குத் தெரிந்தது.


இரவே இளஞ்செழியனின் பெற்றோருக்கு இந்த விபரம் தெரிய வந்ததும், அவனது அப்பா பல இடங்களில் தேடியும் மகன் கிடைக்காமல் வீட்டிற் குச் சென்று விட்டார். காலையில் எழுந்து ஆங் காங்கே தேடிக் கொண்டிருந்தார். இவன் ஊருக்குள் வந்தால் வரதனின் உறவினர்கள் இவனை சும்மா விடமாட்டார்கள் என்று அறிந்த அந்த தந்தை உள்ளம் தேடி அலைந்தது.

இளஞ்செழியன் இடுகாட்டிலிருந்து புறப்பட்டு நடப்பதற்கும் அவனது தந்தை வருவதற்கும் சரியாக இருந்தது. வந்தவர் மகனிடம் நடந்தது என்ன? என்பது போன்ற கேள்விகள் எதுவும் கேட்க வில்லை. இனிமேல் எங்களைப் பார்க்க வேண்டும் என்று இங்கு வராதே. உன்னைப் பார்க்க நாங்கள் வருகிறோம். நீ ஊருக்குள் வரவேண்டாம். இங்கி ருந்து இப்படியே வேலூருக்குச் சென்றுவிடு என்று அவன் செல்வதற்கு பணத்தையும் கொடுத்துவிட்டு வீடு நோக்கி நடந்தார்.

பேருந்து நிலையம் நோக்கி நடக்கையில் தெரிந்த ஒருவர், என்னப்பா அன்பானந்தத்தை ராத்திரி போலீசு புடிச்சிட்டுப் போயிட்டாங்க, நீ எங்க போனே என்று கேட்டதும், நமக்காக நமது நண்பன் மாட்டிக் கொண்டானே, அவனை விடுவிக்க வேண் டும் என்ற எண்ணத்தில்தான் காவல் நிலையம் சென் றான். இப்போது பேருந்தில் அமர்ந்து கொண்டிருக் கிறான்.

தந்தை அவனிடம் இனி நீ இங்கு வரவேண்டாம் என்று சொன்னது மிகவும் கசப்பாக இருந்தது. தனது ஆருயிர் நண்பனைப் பார்க்காமல் எப்படி நான் இருப்பேன். அவன் காவல் நிலையத்தில இருந்து வெளியே வந்திருப்பானா? என்ற குழப்பங்களோடு சென்னை வந்து சேர்ந்தான் இளஞ்செழியன். ◆

# பறவைகள் பலவிதம்



வாழ்நாளில் இராமன்போல் ஒருது ணையே
வளமான கற்புமிக்க புறாக்கள் ஏற்கும்,
பாழ்ஆகும் அழுகிட்ட உடல்கள் தம்மை
பறந்துவந்தே கழுகுக்கூட்டம் சேர்ந்தே உண்ணும்,
வாழ்வினிலே ஒன்றிணைந்தே கிடைத்தல் உண்டு
வலுவான ஒற்றுமையைக் காகம் காட்டும்,
கேழ்வரகுக் கதிரின்மேல் தான மர்ந்தே
கொத்தியதைச் சிட்டுக்கு ருவியும் உண்ணும்.

மிகவுயரம் பறக்கின்ற போதும் கண்ணால்
மேதினியில் தன்னிரையைப் பருந்து காணும்,
பகலெல்லாம் மறைந்திருக்கும் ஆந்தை கள்தாம்
பக்குவமாய் இரவில்வந்தே இரைபி டிக்கும்,
நகங்களது துணையாலே முயலைத் தூக்கும்
நல்வலிமை கொண்டிட்ட பறவை உண்டாம்,
மிகநீண்ட தூரங்கள் ஓய்வே இன்றி
மிதந்துவந்தே நீர்ப்பறவை கூடு கட்டும்.

உருவினிலே சிறிதாம்தூக் கணாங்கு ருவிகள்
உலகமக்கள் வியக்கின்ற கூட மைக்கும்,
கருமைநிறக் குயிலினங்கள் காலை எழுந்தே
கானமழை பொழிந்துநமை விழிக்க வைக்கும்,
குருவிகளில் சிறிதான தேன்சிட் டுக்கள்
குடித்திடுமே மலர்களிலே பறந்தே தேனும்,
பருவப்பெண் மடியமர்ந்தே பச்சைக் கிளிகள்
பாங்குடன் பேசிடவும் நன்றே செய்யும்.

தோகைவிரித் தாடுகின்ற மயிலி னங்கள்
துடுக்குமிக்க சிறுவரையும் மயக்கு வதுடன்,
நாகத்தைக் கூடக்கால்கள் மூலம் தூக்கி
நார்போலக் கிழித்துண்ணும் காட்சி யுண்டே,
வேகமாக அணிவகுத்தே செல்லும் போரின்
வீரர்கள்போல் பென்குயின்கள் நடத்தல் உண்டே,
மேகம்போல் வான்வெளியில் நாளும் மிதந்தே
மிகவுயரம் பறக்கின்ற பறவை களுண்டே.

---

**கவிஞர் இராம. பரஞ்சோதி**
பொழிச்சலூர், சென்னை 74.



# பொதுநல வழக்குகளின் மீதான விமர்சனங்கள்

பல்வேறு வகையான அடிப்படை உரிமைகளை அமல்படுத்துவதற்காக நீதிமன்றத்தால் பயன்படுத்தப் படும் இந்தப் புதிய யுக்தி நன்மையளிக்கும் விளைவை ஏற்படுத்திய பொழுதும் பல விமர்சனங்களுக்கு உட்பட்டுள்ளது.

1. அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக வரும் கடிதங்களை பொதுநல வழக்குகளாக ஏற்றுக் கொள்வதால், நிறைய வழக்குகள் தேக்கமடைவதுடன் பல்வேறு இதர முக்கிய வழக்குகளைத் தீர்மானிப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது.

2. அரசின் மூன்று அங்கங்களான நீதி, நிர்வாகம், சட்டமியற்றுதல் துறைகளுக்கிடையே மோதல் எழக்காரணமாகுமாகையால், பொது நல வழக்குகள் மூலம் நீதிமன்றங்களின் சட்டமியற்றும் துறையிலும் நிர்வாகத் துறையிலும் தலையீடு செய்வதை நியாயப்படுத்தவில்லை.

3. நீதிமன்றம் தனது உத்தரவுகளை செயல்படுத்தும் திறனற்று உள்ளது. பல வழக்குகளில் நிபந்தனைகள் மாறியிருக்கவில்லை. இந்த விமர்சனத்திற்கு நீதிபதி பகவதி அவர்கள் பதிலளித்துள்ளார்கள். நீதிமன்றத்தின் உத்தரவுகளையும் வழிக்காட்டுதலையும் நிறைவேற்றும் பொருட்டு சரத்து 144 மிகவும் தெளிவாக உள்ளது.

“இந்திய நிலவரை அதிகார எல்லையிலுள்ள உரிமையில் மற்றும் குற்றவியல் அதிகாரம் பெற்ற அனைத்து அலுவலர்களும் உச்சநீதிமன்றத்தின் உதவியுடன் செயல்படுதல் வேண்டும்“.

நீதிமன்றத்தின் உத்தரவுகளை செயல்படுத்தத் தவறும் அதிகாரிகளை நீதிமன்ற அவமதிப்புக்காக தண்டிக்க முடியும்.

மோகன்லால் ஷர்மா எதிரி உத்திரபிரதேச மாநிலம் (1989) 2 எஸ்.சி.சி. 609 என்ற வழக்கில்

மனுதாரர் தனது மகன் காவல் நிலையத்தில் அடைக்கப்பட்ட பொழுது காவலர்களால் கொலை செய்யப்பட்டதாகக் கூறி நீதிமன்றத்திற்கு தந்தி ஒன்று அனுப்பினார். நீதிமன்றத்தால் அத் தந்தியையே ஒரு நீதிப்பேராணை மனுவாகக் கருதி அந்தக் காவல் நிலையத்தில் நடந்த மரணத்தை விவரமாகவும் முழுவதுமாகவும் புலன் விசாரணை செய்ய வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் மத்திய குற்றப் புலனாய்வுக் குழுவுக்கு உத்தரவிட்டது.

**நீதித்துறை செயல் முனைப்பு:**

இந்தியக் குடிமக்களின் அரசியலமைப்பு உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உச்சநீதிமன்றத் தின் அதிகாரங்கள்: மிகவும் விரிவடைந்துள்ளது. அமெரிக்க நீதிமன்றங்களில் உள்ளது போல இங்கும் அதைப் பின்பற்றாததற்கு எந்தக் காரணமும் இல்லை. அடிப்படை உரிமைகளை அமல்படுத்துவ தில் எடுக்கப்படும் பாதுகாப்பில் நேர்மறை நட வடிக்கைகளை எடுப்பதில் மாநில அரசுகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்குவது.

ஹுஸ்சைன்னரா காட்டுன்எதிர்பீகார் மாநில அரசு (ஏ.ஐ.ஆரி.1979 எஸ்.சி.1369) என்ற வழக்கில் துரித விசாரணை சரத்து 21ன் படி தனி நபர் சுதந்திரமும், வாழ்வுரிமையையும் அடிப்படை உரிமையின் ஒரு உட்பகுதியாகவும் மற்றும் அவசிய மானதாகவும் உள்ளது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. பீகார் மாநிலத்தில் விசாரணையின்றி பல ஆண்டுகளாக அதிக எண்ணிக்கையில் விசார ணைக் கைதிகளை வெவ்வேறு சிறைகளில் வைத்தி ருந்தனர். நீதிமன்றத்தில் விசாரணைக் கைதிகளின் பெயர்களைச் சமர்ப்பித்த அத்தகைய எல்லா விசார ணைக் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டு மென்று உத்தரவிட்டது. சரத்து 21ன் படி துரித விசாரணை ஓர் அடிப்படை உரிமையாக நிலை நிறுத்த வேண்டியதிலிருந்து விசாரணைக் கைதி களின் இந்த உரிமையை அமல்படுத்துவதற்கு உச்ச நீதிமன்றம் தனது அரசியல் கடமையை ஆற்றியது.

பந்து முக்தி மோர்ச்சாஎதிர்நடுவணரசு (ஏ.ஐ.ஆர் 1984 எஸ்.சி.802) என்ற வழக்கில் அடிப்படை உரிமைகளை அமல்படுத்துவதற்குத் தடங்கலாக ஏதேனுமொரு நடைமுறை தொழில்நுட்ப ஆட்சேபணையை அனுமதிக்காமல் இருக்க அரசியலமைப்பை வடிவமைத்தவர்கள் கவலைப் பட்டதாகவும், பரந்து விரிந்து பொருள் கொண்டு செயலாற்ற உச்சநீதிமன்றத்துக்கு அதிகாரம் அளித்திருப்பதாகவும் தீர்ப்பளித்துள்ளது. சரத்து 32 ன் படி அடிப்படை உரிமைகளை அமல்படுத்த எதிரிடையான நடைமுறைகளையும் பின்பற்ற வேண்டும். ஒரு மக்கள் நல அரசில் அதன் பங்கு எவ்வளவு என்பதை தற்பொழுது உச்சநீதிமன்றம் உணர்ந்துள்ளது. அது தனது புதிய யுக்தியை பயன்படுத்தி ஏழைகளுக்கு உதவுவது மாத்திரமல் லாமல் அவர்களது அடிப்படை உரிமைகளையும் அமல்படுத்தவும் சரத்து 32ஐ உச்சநீதிமன்றம் பயன்படுத்துகிறது. நீதித்துறை செயல்முனைப்பின் வளர்ச்சியைக் கண்டு ஆட்சேபம் செய்பவர்கள், அது பொது மக்களுக்கான ஒரு வரம் என்று நீரு பித்துள்ளதை உணரவில்லை. நீதித்துறை செயல் முனைப்பு அரசால் இழைக்கப்பட்ட பல தவறு களைச் சுட்டிக் காட்டி சரி செய்துள்ளது.

**குழந்தைகள் நலம் :**

வெளிநாட்டு பெற்றோர்களுக்கு இந்தியக் குழந்தைகளைத் தத்து எடுத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்வதற்காக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும், சமூக நல அமைப்புகளையும் பணிக்கு அமர்த்தப்பட்டன. இந்தத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், சமூக நல அமைப்புகளும் முறைகேடு செய்வதாக புகார்க் கடிதம் ஒன்றின் அடிப்படையில் ஒரு நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது. அதிக தூரத்திலுள்ள வெளிநாடு களுக்கு இந்தியக் குழந்தைகளைக் கொண்டு செல்வது நீண்ட ஆபத்தான அபாயகரமான நிலையில் அவர்களது வாழ்க்கைச் சிக்கலுக்கு உள் ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அத்தகைய இந்தியக் குழந்தைகளுக்கு அடைக்கலமும் வீடும் அளிக்காவிட்டால் அவர்கள் பிச்சைக்காரர்களா கவும் அல்லது விலை மாதர்களாகவும் மாற்ற இடமளிக்கிறது. இத்தகைய அவலங்களை மாற்றுவதற்கு நீதிபதி பகவதி அவர்கள் சில கொள்கைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித் தார். வெளிநாட்டுப் பெற்றோர்கள் இந்தியக் குழந்தைகளைத் தத்தெடுப்பதை அனுமதிக்க வேண்டுமா என்பதை இந்தக் கட்டுப்பாடுகள் தீர்மானித்தது. குழந்தைகளின் நலனை உறுதிபடுத்து வதற்கு சரத்துக்கள் 15(3) மற்றும் 39 (இ) மற்றும் (ஊ) ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்புக் கடப்பாடுகளையும் கொள்கைகளையும் இத்தகைய வழக்குகளில் பின்பற்றும்படி தன்னார்வத் தொண்டு

நிறுவனங்களுக்கும் அரசாங்கத்திற்கும் உத்தரவிடப் பட்டது.

ஷீலாபாரிசிஎதிர்நடுவணரசு: (1986) 3 எஸ்.சி.சி. 596 என்ற வழக்கில் அதிகாரிகளால் நாட்டின் பல்வேறு மாநிலங்களின் சிறைகளில் அடைக்கப் பட்டுள்ள 18 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சம்மந்தமாக தாக்கல் செய்யப்பட்ட தகவல்கள் சரியானதுதானா என்பதை கண்டறிய ஒரு சமூக சேவகர் நியமிக்கப்பட்டார். இந்தச் சமூக சேவக ருக்கு அதாவது மனுதாரருக்கு அவரது செலவினங் களுக்காகவும் நாட்டின் எல்லாப்பகுதிக்கும் சென்று விவரம் சேகரித்ததற்கும் ரூ.10,000 செலுத்தும்படி மத்திய அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. குழந்தைகள் நலனுக்காக கொண்டுவரப்பட்ட பல்வேறு மாநிலச் சட்டங்கள் அமலுக்குக் கொண்டு வரவேண்டுமென்றும், அதன் சட்டப்பிரிவுகள் தீவிரமாக அமல்படுத்தப்பட வேண்டுமென்றும், இந்தக் குழந்தைகள் நலனில் மத்திய அரசின் சட்டத்துறை நாடாளுமன்றத்தில் ஒரு சட்டமியற்று வது விரும்பத்தக்கது என்றும் தீர்ப்பளித்தது.

டி.சி.வாத்வா எதிரி பிஹாரி மாநில அரசு (ஏ.ஐ.ஆர்.1987 எஸ்.டிசி 579) என்ற வழக்கில் மனுதாரர் அரசியல் விஞ்ஞானத்தில் அதிக ஆராய்ச்சித் திறன் கொண்ட ஒரு பேராசிரியர், அரசியலமைப்பின் பிரிவுகளை சரியான முறையில் அமல்படுத்தப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்து வதில் ஆழ்ந்த அக்கறை கொண்டவர்.

பீகார் மாநிலச் சட்டமன்றத்தின் ஒப்புதல் இன்றி பல அவசர காலச் சட்டங்களை மீண்டும் விளம்புகை (அமல்) செய்ததை செல்லாதது என்று கோரி வழக்கிட்டார். சரத்து 32ன் கீழ் ஒரு மனுவை நிலைநிறுத்த மனுதாரர் பொது மக்களில் தானும் ஒரு அங்கத்தினராக போதுமான அக்கறை கொண்டவர் என்றும், அரசியலமைப்பிற்கிணங்க இயற்றப்படும் சட்டங்களால் ஆளப்பட வேண்டு மென்பதால் ஒவ்வொரு குடிமகனுக்கும் இதைத் தடுக்க உரிமையிருக்கிறது என்றும் அரசியல மைப்பை மீறி நிர்வாகத்தால் உருவாக்கப்படுபவை சட்டங்கள் அல்ல என்றும் தீர்ப்பளித்தது. டாக்டர் வாத்வாவின் ஆராய்ச்சிதான் நீதிமன்றத்தின் கவனத் திற்கு கொண்டு வர உதவியதால் டாக்டர் வாத்விற்கு ரூ.10,000 செலுத்தும்படி பீகார் அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அரசியல் அமைப்பு உரிமைகள் அரசின் அதன் அலுவலர்களின் சட்டமுரணான மற்றும் தீங்கெண்ண நடவடிக்கையால் அரசியல் அமைப்பு உரிமைகள் மீறப்படும் பொழுது மனுதாரருக்கு அதிகப்படியான வழக்குச் செலவுத் தொகையை இழப்பீடாக கொடுக்கும்படி உத்தரவிட உச்சநீதி மன்றம் சரத்து 32ன்படி அதிகாரம் பெற்றுள்ளது.

இமாசலப் பிரதேச மாநிலம்எதிரிஉமெட்ராம் ஷர்மா (1986) 2 எஸ்.சி.சி.68 என்ற பொது நல வழக்கில், சட்டப்படி செய்ய வேண்டியதை அரசு நிறைவேற்றாமல் அல்லது மந்தகதியில் செயல் படாமல் இருக்கும் வழக்குகளுக்கு குறிப்பிட்ட ஆணைகளை வழங்கி உறுதியான நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் அதிகாரம் பெற்றிருக்கிறது. உயர் நீதிமன்றம் பொதுப் பணித்துறை அதிகாரிகளுக்கு அரிஜனக் குடியிருப்புகளுக்கான பழுதடைந்த சாலையை உடனே சீர்செய்து முடித்துத் தரும்படி உத்தரவிட்டது. மேலும் இந்த சாலைப் பணிக்கு கூடுதலாக ரூ.50,000 கொடுக்கும்படி அரசுக்கு உத்தரவிட்டது.

கௌரவ் ஜெயின்எதிரிநடுவணரவு (ஏ.ஐ.ஆர் 1990 எஸ்.சி.292) என்ற பொது நல வழக்கில் விலை மாதர்களின் குழந்தைகளுக்காக தனியாக பள்ளி களையும் விடுதிகளையும் கட்டித் தரவேண்டு மென்று கோரித் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**நீதிமன்றத்தின் மாண்புக்கும் மரியாதைக்கும் பாதுகாப்பு:**

டெல்லி நீதித்துறை பணியாளர்கள் சங்கம்எதிரி குஜராத் மாநில அரசு (1991) 4 எஸ்.சி.சி.406 என்ற வழக்கில் நீதிமன்றம் முதன் முதலாக ஐ.பி.எஸ். அலுவலர் உட்பட ஏழு காவல் துறை அதிகாரி களை சிறையில் அடைத்தது. 1989ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25ஆம் நாள் குஜராத் மாநிலத்தில் நாடியாட் நகரில் இந்த அதிர்ச்சியான சம்பவம் நந்தது. குஜராத் மாநில மதுவிலக்குச் சட்டத்தை மீறி மது அருந்தியுள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தலைமை குற்றவியல் நீதித் துறை நடுவரை நாடியாட் காவல் ஆய்வாளர் கைது செய்து, தாக்குதல் நடத்தி, கை விலங்கிட்டு, விலங்கி னங்களைப் போல அவரை கயிற்றால் கட்டி, மருத்து வப் பரிசோதனைக்காக வீதியில் அழைத்துச் சென்றார்.


*இந்தச் சம்பவம் நீதிமன்றங்களின் மரியாதையைக் குறைத்தது. வழக்கறிஞர் சங்கங்களின் அங்கத்தினர்கள் சிலரும், அனைத்திந்திய நீதிபதிகள் சங்கமும் சரத்து 32ன் கீழ் உச்ச நீதிமன்றத்தை அணுகி நீதித்துறையின் மாண்பையும் மரியாதையையும் காப்பாற்றும்படி கோரியது. நீதிமன்றம் ஏழு காவல்துறை அதிகாரிகளுக்கு நீதிமன்ற அவமதிப்புக்காக அறிவிக்கை அனுப்பியது.*

*மொத்த சம்பவத்தைப் பொருத்து இருதரப்பினர்களுக்கிடையே பிரச்சினை இருந்ததால் நீதிமன்றம் அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி ஆர்.எம்.சகாய் அவர்களை நியமித்து, விசாரணையை நடத்தி, அறிக்கைத் தாக்கல் செய்ய உத்தரவிட்டது. அவ்வாறு தாக்கல் செய்த அறிக்கையின் பேரில் அந்த ஏழு காவல்துறை அதிகாரிகளும் (ஐபிஎஸ், உட்பட) குற்றவியல் நீதிமன்ற அவமதிப்பு செய்ததாக கண்டறிந்து, குற்றவாளிகள் எனவும் தீர்மானித்து சிறைக்கு அனுப்பியது.*

*நன்றி:* **சட்டப்பாதுகாப்பு / அமல்ராஜ்**

◆

# உலகின் முதல் செல்பி



உலகின் முதல் செல்பி சுமார் 175 ஆண்டுகளுக்கு முன்னர் போட்டோகிராபர் ஒருவரால் எடுக்கப்பட்டதாக தற்போது தெரிய வந்துள்ளது.

செல்பி எனப்படும் தன்னைத் தானே போட்டோ எடுத்துக் கொள்வது வெறித்தனமாக மக்களிடையே பரவி வருகிறது. மற்றவர்கள் உதவி இல்லாமல் தனியே புகைப்படம் எடுக்கத் தொடங்கியவர்கள், தற்போது மெல்ல மெல்ல செல்பி, குரூப்பியாக மாறி வருகிறது.

இந்நிலையில், உலகின் முதல் செல்பி குறித்து தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவின் பிலாடெல்பியா நகரில் வாழ்ந்து வந்தவர் ராபர்ட் கார்னெலியஸ். இவர் கடந்த 1839-ம் ஆண்டு முதல் 'செல்பி' போட்டோ எடுத்துள்ளார். அப்போது அவருக்கு வயது 30.

**முதல் செல்பி**

தனது தந்தையின் கடையை செல்பி முறையில் போட்டோ எடுத்த, ராபர்ட் அந்த போட்டோவின் பின்புறத்தில் 'முதல் ஒளிப்படம். எடுக்கப்பட்டது 1839ம் ஆண்டு' என எழுதி வைத்துள்ளார்.

தனது தந்தையின் கடைக்குப் பின்னால் கேமராவை வைத்து விட்டு லென்ஸ் மூடியை எடுத்த பின்னர் வேகமாக ஓடி வந்து பிரேமுக்குள் உட்கார்ந்துள்ளார். கேமரா கிளிக்கிட்டதும் எழுந்தார். கிட்டத்தட்ட 5 நிமிடம் அவர் ஸ்னாப் எடுக்கும் வரை உட்கார்ந்திருந்தாராம்.

**கெமிக்கல் கோட்டிங்**

ராபர்ட் அடிப்படையில் ஒரு கெமிஸ்ட் ஆவார். கெமிக்கல் கோட்டிங், மெட்டல் பாலிஷிங் தொழிலில் ஈடுபட்டிருந்தார். நண்பர் ஒருவர் மூலம் புகைப்படக் கலையில் ஆர்வம் பிறக்க அதில் ஈடுபட்டார்.

**2 ஆண்டு மட்டும்**

2 ஆண்டுகள் புகைப்படக் கலைஞராக வலம் வந்த ராபர்ட், அதன் பின்னர் தனது தந்தை நடத்தி வந்த விளக்கு வியாபாரத்தை கவனிக்கச் சென்று விட்டாராம்.

பின்னர், செல்வந்தராக வாழ்ந்த ராபர்ட், 1893ம் ஆண்டு தனது 84 வயதில் காலமானார்.

◆

# ஃபேஸ்புக் வேறுபாடு என்ன?




ஒரு சீடன், குருவிடம் சென்று, காதலுக்கும் திருமணத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன என்று நீங்கள் எனக்கு விளக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அதற்கு அந்தக் குரு, "உன் கேள்விக்கு, பிறகு பதில் சொல்கிறேன். முதலில் நீ ரோஜாத் தோட்டத்திற்குச் சென்று, அங்கே உனக்கு எது உயரமான ரோஜாச்செடி என்று தோன்று கிறதோ, அதை எடுத்துக் கொண்டு வா. ஆனால் ஒரு நிபந்தனை, நீ எக்காரணம் கொண்டும் போன வழியே திரும்பி வரக்கூடாது" என்றார். குருவின் கட்டளையை எற்ற சீடன் செடியை எடுத்துவரப் புறப்பட்டான்.

சிறிது நேரம் கடந்ததும் வெறுங்கையோடு திரும்பி வந்தான் அந்தச் சீடன். அவனைப் பார்த்து, "உன்னைக் கவர்ந்த உயரமான செடி எங்கே" என்று கேட்க, அவனோ, "குருவே வயலில் இறங்கி நடந்த போது, முதலில் உயரமான ஒரு செடி என்னைக் கவர்ந்தது. அதைவிட உயரமான ரோஜாச் செடிகள் தென்பட்டன. அவற்றைவிட உயரமான செடிகள் இருக்கக்கூடும் என்று மேலும் நடந்து சென்று தேடினேன். அதன் பிறகு கண்ணில் பட்டதெல்லாம் குட்டையான ரோஜாச் செடிகளாகவே இருந்தன. நீங்கள் சென்ற வழியே திரும்பக்கூடாது என்று சொன்னதால், நான் முன்னால் பார்த்த உயரமான செடியை கொண்டுவர இயலாமல் போய்விட்டது" என்றான்.

"இதுதான் காதல்" என்று புன்முறுவலோடு கூறினார் குரு. பின்னர், "சரி போகட்டும் அதோ அந்த வயலுக்குச் சென்று உன் கண்ணுக்கு அழகாகத் தெரிகின்ற ஒரு சூரியகாந்திச் செடியைப் பிடுங்கி வா. ஆனால் இப்போது இன்னும் ஒரு நிபந்தனை, ஒரு செடியைப் பிடிங்கியபின் வேறொரு செடியைப் பிடுங்கக்கூடாது" என்றார். சீடனும் சென்றான். சீக்கிரத்திலேயே ஒரு சூரியகாந்திச் செடியுடன் திரும்பி வந்தான். குரு கேட்டார், "இதுதான் அந்தத் தோட்டத்திலேயே அழகான சூரியகாந்திச் செடியா?" என்று. சீடன் சொன்னான், "இல்லை குருவே, இதைவிட அழகான செடிகள் இருக்கின்றன. ஆனால் முதல்முறை கோட்டை விட்டது போல் இந்தமுறையும் விட்டுவிடக்கூடாது என்ற அச்சத்தில் முகப் பிலேயே எனக்கு அழகாகத் தோன்றிய இந்தச் செடியைப் பிடுங்கி வந்துவிட் டேன். உங்கள் நிபந்தனைப்படி ஒரு செடியயைப் பிடுங்கியபின் வேறு செடியைப் பிடுங்கக்கூடாது என்பதால் அதன் பிறகு இதைவிட அழகான செடி களை நான் பார்த்தபோதும் பறிக்கவில்லை" என்றான்.

இப்போது குரு சொன்னார், "இதுதான் திருமணம் என்பது" என்று. சீடன் காதலுக்கும் திருமணத்துக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்து கொண்டான்.

முகநூலில் இருந்து **டேவிட் கிறிஸ்டோபர் ஆனந்த்.**

# எது தமிழ்?



பாவலர் வளர்த்த தமிழா? – அவரைப்
பாங்கொடு வளர்த்தது தமிழா?
காவலர் வளர்த்த தமிழா? – அவரைக்
காத்து வளர்த்தது தமிழா?
நாவலர் வளர்த்த தமிழா – அவரை
நாளுமே வளர்த்தது தமிழா?
பூவுல குக்குள் தமிழா? – அன்றி
பூந்தமி முக்குள் ளுலகா?

உள்ளுவ தெல்லாம் தமிழா? – எங்கள்
உள்ளமே தமிழெனப் படுமா?
கொள்ளுவ தெல்லாம் தமிழா? – எங்கள்
கொள்கையே தமிழெனப் படுமா?
தெள்ளமு தென்பது தமிழா? – அமுதே
தீந்தமிழ் என்றிடப் படுமா?
அள்ளுவ தெல்லாம் தமிழா – எம்மை
அள்ளிய தேதமிழ் தானா?

தேனெனப் படுவது தமிழா? – தேனே
தீந்தமிழ் என்றிடப் படுமா?
ஊனெனப் படுவது தமிழா? – எங்கள்
உயிரே தமிழெனப் படுமா?
வானெனப் படல்தமிழ் புகழா? – அறிவு
வாரிதி யேதமிழ் ஆமோ?
நானெனப் படுவது தமிழா? – அன்றி
நற்றமிழ் எனலே நானா?

---

**கவிஞர் மருத்துவர் ச. பாஸ்கரன்.**



# சென்னை மாநகராட்சி செய்தி வெளியீடு

**செ. வெ. எண்: 236**
**நாள்: 27.10.2014**

மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் முதன்மைச் செயலர்/ஆணையாளர், சென்னை மாநகராட்சி திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் சென்னை மாநகராட்சி பொதுமக்களின் நலன்களை பாதுகாக்கும் வகையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

தற்போது பெய்து வரும் வடகிழக்கு பருவ மழையினால் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சென்னை மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள மழைநீரால் பாதிக்கப்பட்ட 824 சாலைகளில் 3,156 இடங்களில் பள்ளங்கள் கண்டறியப்பட்டு 2,613 பள்ளங்கள் தற்காலிமாக வெப்பக்கலவை(Hot Mix), மழைக்காலங்களில் பிரத்யேகமாக உபயோக்கிக்கப்படும் தார்கலவை (Cold Mix) கருங்கல் ஜல்லி மற்றும் மலைமண் கலந்த ஈரக்கலவை (Wet Mix) மற்றும் சிமெண்ட் கான்கிரீட்கலவை (Cement Concret Mix) ஆகியவை கொண்டு சரிசெய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 543 இடங்களில் உள்ள பள்ளங்கள் சரிசெய்யப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகரில் வழக்கத்திற்கு அதிகமாக 34 விழுக்காடு மழைபெய்த போதிலும் பொது மக்களுக்கு மழைநீரால் ஏற்பட்ட இடர்பாடுகள் அதிக அளவில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், தற்போது தொடர்ந்து பெய்து வரும் வடகிழக்கு பருவ மழை காரணமாக சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தொற்று நோய்கள் பரவாமல் இருக்க தொடர் நடவடிக்கையாக பல்வேறு பணிகள் பொதுசுகாதாரத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- அனைத்து மண்டலங்களிலும் இன்று (27.10.2014) குடிசை பகுதிகளில் 31 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற்றன. இதில் 2848 பேர்கள் பயனடைந்துள்ளனர். மொத்தம்

இதுவரையில் 75 முகாம்கள் நடத்தப்பட்டு 6623 பேர்கள் பயனடைந்துள்ளனர். மருத்துவ முகாம் களில் நோய் அறிகுறிகளில் கண்டறியப்பட்டவர் களுக்கு உடனடி சிகிச்சை அளிக்கப்பட்டு வரு கிறது.

➢ தீவிர கொசுத்தடுப்பு பணிக்காக 3520 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

➢ காய்ச்சல் உள்ளவர்கள் அனைவருக்கும் மலேரியா நோய்களுக்கான ரத்த தடவல் எடுக்கப் பட்டு வருகிறது.

➢ தனியார் மற்றும் அரசு மருத்துவ மனை களில் தினந்தோறும் காய்ச்சல் பற்றிய விவரங்கள் பெறப்பட்டு நோய்கள் கண்காணிக்கப் பட்டு வருகின்றன.

➢ தினந்தோறும் 1000 இடங்களுக்கு மேல் குடிநீரில் குளோரின் அளவு பரிசோதிக்கப்பட்டு, குடிநீரின் தரம் உறுதி செய்யப்படுகின்றது.

➢ குளோரின் அளவு குறைவாக உள்ள இடங்களில் குளோரின் மாத்திரைகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. மழைநீர் தேங்கியுள்ள இடங்களில் பினாயில் மற்றும் பிளீச்சிங் பவுடர் தெளிக்கப்பட்டு வருகின்றது. அந்த பகுதிகளில் தீவிர துப்புரவு பணி மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

➢ தொற்று நோய் தடுப்பு நடடிவக்கைக்காக பிளீச்சிங்பவுடர், குளோரின் மாத்திரைகள் போது மான அளவு உள்ளது.

➢ பொதுமக்களுக்கு பொதுசுகாதார பணி யாளர்களை கொண்டு காய்ச்சி வடிகட்டிய குடி நீரினை குடிக்கவும், சுகாதாரமான உணவு உட் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

➢ மழைக்காலங்களில் பரவும் நோய்களை தடுக்க பொதுமக்கள் மேற்கொள்ளவேண்டிய நோய் தடுப்பு முறைகள் குறித்த கைப்பிரதிகள் அச்சிடப் பட்டு அனைத்து கோட்ட சுகாதார ஆய்வாளர் களை கொண்டு வழங்கப்பட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

➢ சென்னை மாநகராட்சி மருத்துவமனை களில் சிகிச்சைக்கென வரும் பொதுமக்களுக்கு சேவை அளிக்கும் வகையில் போதுமான பரி சோதனை கருவிகள் மற்றும் மருந்துகளும் உள்ளன.

➢ தனியார் மற்றும் அரசு மருத்துவ மனை களில் தினந்தோறும் காய்ச்சல் பற்றிய விவரங்கள் பெறப்பட்டு நோய்கள் கண்காணிக்கப் பட்டு வருகின்றன.

➢ காய்ச்சல் உள்ள பொதுமக்கள் தங்களின் அருகாமையில் உள்ள மாநகராட்சி மருத்து வமனையினை அணுகி தேவையான சிகிச்சை பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

வெளியீடு: **மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாநகராட்சி**


## முற்றம் இதழுக்கான விளம்பரக் கட்டணங்கள்

பின்னட்டை பல வண்ணம் ரூ. 10,000/-
பின் உள் அட்டை பல வண்ணம் ரூ. 7,000/-
கருப்பு வெள்ளை முழுபக்கம் ரூ. 5,000/-
கருப்பு வெள்ளை அரைப் பக்கம் ரூ. 2500/-
க. வெ. கால் பக்கம் ரூ. 1500/-

சந்தா விவரம்: தனி இதழ் ரூ. 10/-
ஆண்டு சந்தா ரூ. 120/-

# தமிழின் மரணப் பயணம் தொடங்கி விட்டதா?

## டாக்டர் வீ

உலகில் தற்போது 7,000 மொழிகள் பேசப்படும் மொழிகளாகக் கணக்கிடப்பட்டுள்ளன. 2100-ம் ஆண்டுக்குள் அவற்றுள் 90% மறைந்துவிடும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

மக்களின் மொழியும் அவர்களின் அடையாளமும் நெருக்கமான தொடர்புள்ள?வையாகும். தமது மொழி பயனற்றது என்று கருதும் மக்கள், தமது அடையாளமும் பயனற்றது என்றே கருதுவார்கள். அதன் விளைவாக, அந்தச் சமூகத்தில் சமூகச் சீர்குலைவு, மனத்தளர்ச்சி, தற்கொலை, போதைப் பொருள் பழக்கம் போன்றவை அதிகரிக்கும்.

தமிழ்நாட்டில் பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே போதைப்பொருட்களைப் பயன்படுத்துதல், தற் கொலை, மனத்தளர்ச்சி போன்றவை கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்துவருவதைப் பத்திரிகைச் செய்திகள் உணர்த்துகின்றன. பணத்துக்காகக் குடும்பத்துக்குள் கொலை, வன்முறை, பிரிவு போன்றவையும் அபரிமிதமாக அதிகரித்துள்ளதும் செய்திகளாக வெளிவந்துள்ளன.

ஒரு மொழி மரணமடைவதற்கு முன் நடைபெறுவது 'மொழி பலவீனமாதல்' என்று அழைக்கப்படுகிறது. ஒரு மொழி பேசுபவர்கள், அதில் மற்றொரு மொழியைக் கலந்து பேசுவதும், எழுது வதும் எந்த அளவுக்கு அதிகரிக்கிறதோ, அந்த அளவுக்கு அந்த மொழியின் பலவீனமாதல் போக்கு அதிகரிக்கும். அந்த பலவீனமாதல் போக்கின் உச்சமே அந்த மொழியின் மரணத்தில் முடியும். ஒரு மொழியின் மரணம் என்பது 'ஒருவர் தனது ஆன்மாவின் ஒரு பகுதியை இழப்பதைப் போன்றதாகும்.'

தமிழ்நாட்டில் தரத்தில் முன்னணியில் உள்ள பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் படிக்கும் தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களில் பெரும்பாலானோர் ஆங்கிலத்தில்தான் தமக்குள் பேசிக்கொள்கின்றனர். அதில் தகவல் பரிமாற்றச் சிக்கல் வரும் சமயங்களில் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துகிறார்கள். கிராமங்களில் பேசும் மக்களின் மொழியில் ஆங்கிலச் சொற்கள் இடம் பெறுவது அதிகரித்துவருகிறது. ◆

---




முற்றம் இதழ், தொடர்ந்து உங்கள் வீட்டு முற்றம் வந்து சேர, உடனே சந்தா செலுத்துங்கள். அலைபேசி, குறுஞ்செய்தி, மின்னஞ்சல் மூலமாகவும் எங்களை அழைத்து உங்களை முற்றத்தின் சந்தாதாரராக பதிவு செய்து கொள்ளலாம். 8056281973, mutram2010@gmail.com. முற்றம் திங்களிதழை முழுவதும் இணையதளத்திலும் நீங்கள் படிக்கலாம். இணைய தள முகவரி www.mutram.in

உங்களது எழுத்தாக்கங்களை அஞ்சல் மூலம் எங்களுக்கு அனுப்புங்கள். உங்களது படைப்புகளை மாற்றவோ, திருத்தவோ, நீக்கவோ ஆசிரியருக்கு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**


INEGO
FINEST★MADE
INEGO DENIM
www.inego.in
Shop online at :
HOME SHOP 18 .COM
flipkart.com
JABONG .COM
snapdeal.com

MUTRAM - Tamil & English Monhtly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 - 16.
Date of Publication 7th of every month

Green Leaf

Premium Green Tea

Top 10 health benefits of
Green Tea

1. Improves Brain Health
2. Lowers Blood Sugar Levels
3. Reduces Cholesterol Levels
4. Promotes Oral Health
5. Helps Maintain Body Weight
6. Supports Skin Health
7. Lowers Blood Pressure
8. Reduces the Risk of Cancer
9. Keeps Bones Strong
10. Fights Against Aging

For Enquiry

Call: 9790764721